பக்கங்கள்: பதினாறு+VIII=24

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 01 புதன்கிழமை (14.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 139

# அதிகாரப் பகிர்வு, நல்லிணக்கம்; இரண்டுக்கும் அரிய சந்தர்ப்பம்

## அமெரிக்க உதவி அமைச்சர் சுட்டிக்காட்டுகிறார்



நியூயோர்க், ஏப்ரல் 14

இலங்கையில் நடைபெற்று முடிந்த தேர்தலின் பெறுபேறுகள் - முடிவுகள் - அந்த நாட்டில் அதிகாரப் பகிர்வு, தேசிய நல்லிணக்கம் ஆகிய இரண்டையும் உருவாக்குவதற்கு அரசாங்கத்துக்கு அரிய சந்தர்ப்பத்தை வழங்கி உள்ளது.

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் அமெரிக்காவுக்கான மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக்.

இலங்கையின் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமது நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்தவும், வளர்ச்சிப்பாதையில் முன்னோக்கிச்செல்லவும் உதவ வேண்டும். அவர் அவற்றை நாடி உடனடியாகச் செயற்பட வேண்டும் என்றும் றொபேர்ட் ஓ பிளேக் வலியுறுத்தினார்.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்கஉதவி அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் விரைவில் இலங்கை, பாகிஸ்தான் மற்றும் சில நாடுகளுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவுள்ளார். அதனையொட்டி அவர் ஊடக மாநாடு ஒன்றை நேற்று நடத்தினார். அப்போது அவர் இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் குறித்து நீண்ட நேரம் கருத்து வெளியிட்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க)




## வன்னி மக்களின் மீள்குடியேற்றத்துக்கு உதவ இலங்கைச் செஞ்சிலுவை 2 வருடத்திட்டம்

### சர்வதேச அமைப்புகளிடம் அவசர நிதி கேட்கிறது

லண்டன், ஏப். 14

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட ஐயாயிரம் குடும்பங்களுக்கு - சுமார் 25,000 மக்களுக்கு- உதவுவதற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் 3,382,480 அமெரிக்க டொலர் அவசர நிதியை சர்வதேச அமைப்புகளிடம் கோரியுள்ளது.

நாட்டின் வடபுலத்தில், குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் மக்களை மீளக்குடியமர்த்தவும் அவர்களின் புனர்வாழ்வுக்குமென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மேற்கண்ட தொகை மதிப்பீடுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் ஒன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் இளம்பிறை இயக்கத்துடன் இணைந்து தயாரித்துள்ளது.

சர்வதேச உதவித் திட்டங்களை 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் 800 வீடுகளைப் புதிதாக அமைத்துக் கொடுக்கவும், சேதமடைந்த 1,200 வீடுகளைத் திருத்திக் கொடுக்கவும் பாதிக்கப்பட்ட மக்களின் சுகநலனுக்கான திட்டங்களைச் செயற்படுத்தவும் அவர்கள் தமது தொழில் துறை மற்றும் வாழ்வாதாரங்களை ஆரம்பிக்கவும் வகை செய்யப்படவுள்ளது.

இந்த மேற்கண்ட உதவித் திட்டங்களை நிறைவேற்றவே இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பணமாகவோ அல்லது பொருளாகவோ உதவுமாறு சர்வதேச அமைப்புகளிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

(அ)

## யாழ்.நகரில் என்றுமில்லாதவாறு மக்கள் கூட்டம் அலைமோதியது

### வீதிகளில் நடமாட முடியாதவாறு சனநெரிசல்

யாழ்ப்பாணம், ஏப். 14

புதுவருடத்துக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்ய நேற்றிரவு வரை நகரில் பொதுமக்கள் அலை மோதினர்.

குறிப்பாக நகரைச்சுற்றியுள்ள ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, முனீஸ்வரன் வீதி ஆகியவற்றிலும் நல்லூர் வீதியில் உள்ள கடைகளிலும் சனக் கூட்டம் அலை மோதியதைக் காணமுடிந்தது. மக்கள் கூட்டம் காரணமாக நகரில் வாகன நெரிசல் ஏற்பட்டது. வாகனங்கள் ஓரிடத்தைக் கடக்க அரை மணி நேரம் சென்றதை அவதானிக்க முடிந்தது.

யுத்தம் முடிந்த பின் நாளை பிறக்கும் முதலாவது புத்தாண்டு நிகழ்வுகளில் பங்கேற்க தெற்கில் இருந்தும் சிங்கள மக்கள் பெரும் எண்ணிக்கையில் இங்கு வந்துள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)


நேற்றிரவும் யாழ்.நகரக் கடைகளில் புத்தாண்டு வியாபாரம் அமோகம்...!

## கே.பியை விசாரிப்பதற்கு இந்தியா மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 14

கே.பி. என்ற குமரன் பத்மநாதனை விசாரணை செய்யவும் அவரது வங்கிக் கணக்குகளை பரிசீலிக்கவும் உரிய ஏற்பாட்டினைச் செய்து தருமாறு இந்திய அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வருடம் பத்மநாதன் கைது செய்யப்பட்டவுடன் இந்திய அதிகாரிகள் இவ்வாறு

(16ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு

## தமிழ்க் கூட்டமைப்பின் புதிய எம்.பிக்கள் திருமலையில் ஞாயிறு கூடுகின்றனர்

திருகோணமலை, ஏப். 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருகோணமலையில் கூடி எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவிருக்கின்றனர்.

கொழும்பில் கூடுவதற்கு முன்னதாக திருகோணமலையில் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் 18ஆம் திகதி கூடி ஆராய முன்னேற்பாடுகளைச் செய்துள்ளோம். அதுதொடர்பான விவரங்கள் இன்று அறிவிக்கப்படும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கூட்டமைப்பு கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுகள், நடவடிக்கைகள் தொடர்பாக எமது பிரதேசத்தில் கூடி ஆராய்வது நல்லது என்று முடிவு செய்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசாங்கத்திடம் இருந்து எதுவித அழைப்பும் நேற்றிரவு வரை தமக்குக் கிடைக்கவில்லை என்றும் சம்பந்தன் மேலும் கூறினார்.

(ஒ-1)

## மக்களை ஐக்கியப்படுத்தும் வகையில் புதுவருடப் பண்டிகை அமைய வேண்டும்

### புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி



கொழும்பு,ஏப். 14

தாய்நாடு ஐக்கியப்படுத்தப்பட்ட பின்னர் இணக்கமான மற்றும் திருப்தியான நிலையில் கொண்டாடப்படும் முதலாவது புதுவருடம் இதுவாகும். இது போன்ற புதுவருடப் பண்டிகைகள் எமது மக்களை இதயத்தாலும், மனதாலும் மேலும் ஐக்கியப்படுத்தும் வகையில் அமையவேண்டும் என்பது எனது பெருவிருப்பமாகும். சிங்களவர்களாலும், தமிழர்களாலும் ஒரே வகையில் கொண்டாடப்படும் புதுவருடக் கொண்டாட்டங்கள் எமக்கிடையிலான உறவுகளை அங்கீகரிப்பதற்கு மிகவும் பொருத்தமானவையாகும். எமது நாட்டு மக்களிடம் உள்ள பிணைப்புகளை மேலும் வலுப்படுத்தும் பலமான கலாசார பாரம்பரியங்களின் தொடர்ச்சியாகவே இதனைக் காணமுடிகின்றது.

- இப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாம் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மக்களிடம் புதுவருடத்தின் மகிழ்ச்சியையும் அர்த்தத்தையும் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு செய்துள்ளது. விவசாய அபிவிருத்தி மற்றும் வாழ்க்கை நெறி முறைகள் மூலம் நாட்டுக்கு சுபீட்சத்தைக் கொண்டுவர நாம் ஆவன செய்துள்ளோம்.

எதிர்கால பரம்பரையான எமது பிள்ளை

(16ஆம் பக்கம் பார்க்க)

இன்னும் 04 நாள்களில்

JAFFNA International 2010 TRADE FAIR

2010 ஏப்பிரல் 18,19,20 வரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப 7.00 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயோதர

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 601390251 முதல் 601406241 வரை. சீட்டிழுப்பு இல. 639 திகதி 12-04-2010

வெற்றி எண்கள்

07 14 16 20 G

ஜக்பொட் பரிசு ரூ. 15,762,370/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 15,762,370/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 2,000/= | 26,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 343 | 1,000/= | 343,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 542 | 1,000/= | 542,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 13759 | 60/= | 825,540/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6479 | 40/= | 259,160/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 162195 | 20/= | 3,243,900/= |
| | | மொத்தம் ரூ. | 6,039,600/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்

தங்கக்காசு வெற்றியாளர் - S.M. ரஞ்சித் திலகரத்ன - மாத்தளை.

கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - K.S.A.J. டி சில்வா - மொரட்டுவை.

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 601403946-6-03 |
| களுத்துறை | 601400353-3-10 |
| கம்பஹா | 601397102-8-18 |
| பதுளை | 601390763-5-37 |
| அம்பாந்தோட்டை | 601395228-5-27 |
| கொழும்பு | 601405623-2-05 |
| பொலன்னறுவை | 601396304-2-37 |
| காலி | 601401882-3-49 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,439,600/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 16,200,940/=

தொடர் இல. 601406242 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஏப்ரல் 19 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2333546/7


# கணவனின் கத்தி வெட்டுக்கு மனைவியும், மகனும் காயம்

கைதடி, ஏப். 14

மதுபோதையில் நின்றவர் மகனோடு வாக்குவாதப்பட்டுக்கொண்டு திடீரென கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியதனால் மகனும் படுகாயமடைந்தார். அதன் போது தடுக்க வந்த மனைவியும் படுகாயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கைதடி தெற்கில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தயாரான திருமதி பொன்னன் இரத்தினகிளி (வயது 58) கையிலும் அவரது மகனான பொன்னன் ரஜிகாந்தன் (வயது 28) தலையிலும் நெஞ்சிலும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(1-288)


BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்.

மாணவச் செல்வங்களே ! 'நல்ல நேரத்தில்' 'நல்ல நாளில்' 'தரமான கல்வியைப்' பெற்றிட ''Super Grade' ஆசிரியர் குழுவுடன் இணையுங்கள்.

O/L DAY CLASS

புதன் காலை 8.00

ஆரம்பம் : 21.04.2010


# கலைமாணிப்பட்டம் பெற்ற விழிப்புலனற்ற பட்டதாரிகளுக்கு சனியன்று கௌரவிப்பு

கைதடி, ஏப். 14

யாழ்.பல்கலைக்கழகத்தில் முதன் முறையாக பொதுக்கலைமாணிப் பட்டம் பெற்ற இனிய வாழ்வு இல்லத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இனிய வாழ்வு இயக்குநர் ப.ராஜ்குமார் தலைமையில் கந்தர் மடம், ஆத்திசூடி வீதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெற இருக்கின்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகபேரவை உறுப்பினர். எஸ். சிறீபதி கலந்து கொள்வார்.

இந்தக் கௌரவிப்பு விழாவில் கைதடி நவீல்ட் பாடசாலையில் கல்வி கற்கும் இனிய வாழ்வு இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களையும் மற்றும் ஆசிரியர்களையும், ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறும் விழாக்குழுவினர் கேட்டுள்ளனர்.

(1-288)

# சேவை நலன் பாராட்டு



திரு.நாகேந்திரம் பாவகிருஷ்ணன் (SLTS -I)

59 ஆவது அகவையின் சேவை நிறைவுசெய்து ஓய்வுபெறும் எமது பிரதி அதிபர்

தி/கிளிவெட்டி ம.வி (15.10.1979 - 03.05.1983)
தி/ அவ்வைநகர் ம.வி (04.05.1983 - 14.02.1984)
யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை(15.02.1984 - 31.12.1985)
யா/ நெடுந்தீவு ம.வி (01.01.1986 - 15.01.1989)
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை (16.01.1989 - இன்றுவரை)

முத்தமிழ்போல் இனியகுணம் சித்தமதைக் கவர்ந்திழுக்கும் சிம்மக்குரல்
பைந்தமிழின் காதலினால் எம் பள்ளியிலே உமது பணி
இருபத்தொரு ஆண்டுகளாய், புகழ்பரப்பி வளரச்செய்தீர்
சித்திரைத் திங்களின் சீர்பெற்ற புத்திரனே
இத்தினம் நீங்கள் இறையருளால் வாழவென வாழ்த்துகிறோம் வாழியவே.

அதிபர், ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை.


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
இல. 32, 74, கஸ்தூரியார் வீதி, யாழ்.
தொ.பே. 021 222 4134

NLN கிளை நிறுவனம்

நியூ நகுலா ஜுவல்லறி
இல. 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 4101



உங்கள் இளமைக்கு மெருகூட்டும்

அசல் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றிட ஒரே ஸ்தாபனம்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 16 ★ 10 ★ 1945

உதிர்வு 15 ★ 03 ★ 2010

## அமரர் நாகமுத்து இராசா

கடந்த 15.03.2010 அன்று எமது குடும்பத் தெய்வத்தின் மரணச் செய்திகேட்டு உடன் இல்லம் வந்து ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்து, இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 16.04.2010 வெள்ளிக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாலியாவத்தை,
சங்கானை. (சி/566553) குடும்பத்தினர்.

# முடிவிலாத் துயர் சுமக்கும்... முதலாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் தியாகராசா சின்னக்கிளி

மண்ணில் 25★04★1958 விண்ணில் 24★04★2009

திதி: அமாவாசை

உயிரே உனை நாம் இழந்து
ஓராண்டு உருண்டதுவோ?
உணர்வில் நிறைந்தவரே
உமை நாம் மறப்போமோ?
இறப்பே உமக்கு இல்லை
எங்கள் மன மாளிகையில்
கணமும் பிரியாது
வாழ்ந்திருப்பீர் அமைதி கொள்க!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நிரந்தர முகவரி: அண்ணாவீதி, பலாலி.
தற்காலிக முகவரி: இல 76, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
குடும்பத்தவர். (மீசாலை) (96946)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி பகர்தலும்



## திருமதி பத்மராணி இராசையா

தோற்றம் 03.12.1948

மறைவு 16.03.2010

கடந்த 16.03.2010ல் இறையடி எய்திய எமது குடும்பக் குல விளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (15.04.2010) காலை 6 மணியளவில் குரும்பை கட்டி வயிரவர் கோயில் முன்றலில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து எமதில்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தயவு கூர்ந்து கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மந்திகை அம்மன் கோயிலடி,
பிரதான வீதி,
மந்திகை. (சி/566554)

யசோதா (மகள்),
இரமேஷ், இரஞ்சன் (மகன்மார்),
உமாசங்கர் (மருமகன்),
மாலா, வாசுகி (மருமகள்மார்).

# மரண அறிவித்தல்

## திருமதி சில்வியா இம்மானுவல்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சில்வியா இம்மானுவல் நேற்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன்பிள்ளை - கிளரா தம்பதியினரின் அன்பு மகளும் அந்தோனிப்பிள்ளை - விக்ரோறியா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மேஜர் இம்மானுவலின் அன்பு மனைவியும் திருமதி ராணி அரியநாயகம் (பிராந்திய முகாமையாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), அமரர் அருட்திரு.பற்றிக் இம்மானுவல் (குனேன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் A.F.அரியநாயகத்தின் அன்பு மாமியாரும் திருமதி சுரோஷினி டோமினிக்கின் (லண்டன்) அன்புப் பேர்த்தியாரும் செல்வி கிறிஸ்ரி Freyaவின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.04.2010) புதன்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பாண்டியந்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(96952)

54/3, புனித அன்னாள் கோயில் முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.

தகவல்: ராணி அரியநாயகம் (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஐக்கியம் சாத்தியமாக.....!

வடக்கு,கிழக்கில் உள்ள சகல தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைந்து செயற்பட வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரான இரா. சம்பந்தன்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் களின் தாயகமான வடக்கு - கிழக்கில் தனிப் பெரும் கட்சி யாகத் தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. அந்த வெற்றிக்குத் தலைமை வகித்தவர் என்ற கௌரவத்தோடு, தமிழ் மக்களின் ஒற்றுமையின் பெயரால் இந்த அழைப்பை அவர் விடுத்திருக்கின்றார்.

''வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் தேர்தலுக்கு முன்னர் பேச்சு நடத்தி எம்முடன் இணையுமாறு வேண்டுகோள் விடுத்தோம். எனினும் எமது முயற்சிகள் அனைத்தும் தோற்றுப் போயின. எமக்கு எதிராக பல்வேறு அரசியல் கட்சிகளும் சுயேச்சைகளும் களத்தில் குதித்தன. எனினும் எம்மால் வெற்றி பெறமுடிந்தது. தமிழ் மக்களின் ஒற்றுமையின் பெயரால் அவர்கள் அனைவருடனும் சேர்ந்து செயலாற்ற நாம் தயங்கமாட்டோம். தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி - இது அத்தியாவசியமான கடமை என்று புரிந்து கொண்டு - வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் எம்முடன் ஐக்கியப்பட்டுச் செயற்பட முன்வரவேண்டும். தமிழ்மக்கள் தமது நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எம்மைத் தெரிவு செய்திருக்கின்றார்கள். அதனடிப்படையில் நாம் அனை வரும் ஒன்றுபட்டு தமிழ் பேசும் மக்களின் நன்மை கருதிச் செயற்படுவோம்.'' - இப்படி இரா.சம்பந்தன் தமது உரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

சம்பந்தனுடைய இந்தக் கருத்தில் - அழைப்பில் - முக்கியமாக இரண்டு அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டியவையாகப் பொதிந்து கிடக்கின்றன.

ஒன்று - இந்தத்தேர்தல் முடிவு மூலம் தமிழ்ப் பேசும் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியுள்ள அந்தஸ்து அல்லது அங்கீகாரம் பற்றிய அவரது கருத்து.

அடுத்தது - ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு கூட்டமைப்புடன் சேர்ந்து ஐக்கியப்பட்டு செயற்படுவதற்கான அழைப்பு.

இந்த இரண்டிலும் தப்போ அல்லது தவறோ இருப்பதாக நாம் கருதவில்லை. ஆனால் அவற்றுக்குள் நுட்பமாக - சூட்சுமமாக - சுட்டிக் காட்டப்பட வேண்டிய சில விடயங்கள் இருப்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

தமிழ்ப் பேசும் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அங்கீகாரம் அளித்துள்ளார்கள் என்ற அடிப்படையில், அக் கட்டமைப்பு ஐக்கிய செயற்பாட்டுக்காக ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு முன்னர் - முதலில் - தனது கட்டமைப்பு ஐக்கியமாகச் செயற்படக் கூடிய வகையில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். தமிழ் பேசும் மக்களின் அங்கீகாரம் பெற்ற ஒரு கட்சியாக - கூட்டமைப்பாக - தன்னைப் பிரகடனப்படுத்தி, உரிமைகோரும் தரப்பு, முதலில் இந்த அடிப்படைத் தேவைப்பாட்டை உறுதி செய்யவேண்டும். அப்போது தான், வெளியில் இருக்கும் தரப்புக்களைத் தன்னுடன் ஐக்கியப்பட்டுச் செயற்பட வருமாறு அழைக்கும் தகுதி அதற்குக் கிட்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரை யில் முதலில் அதன் அங்கத்துவ - பங்குதாரர் - கட்சி ஒவ்வொன்றும் தத்தமது கட்சிக்குள் திறந்த, வெளிப்படையான, ஆக்கபூர்வமான, பரஸ்பர புரிந்துணர்வுமிக்க தொடர்பாடல் களையும் கருத்துப் பரிமாற்றங்களையும் ஒழுங்காகக் கொண் டிருக்க வேண்டும்.அடுத்த கட்டத்தில் அக்கட்சிகள் அனைத்தும் தங்களுக்கு இடையில் கொள்கை ரீதியிலும், செயற்பாட்டு ரீதியிலும் புரிந்துணர்வுடன் செயற்படக் கூடிய அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவு செய்யவேண்டும்.

ஆனால், இங்கு அந்த நிலைமை இல்லவேயில்லை என்பதுதான் உண்மையான யதார்த்தப் புறச்சூழலாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள், உறுதியான, வலுவான, சுறுசுறுப்பான நாளாந்தச் செயற்பாடுகளைக் கொண்டவை அல்ல என்பதுதான் மெய்மைநிலை. ஒவ்வொரு தலைவர் அல்லது பிரமுகரின் பெயரின் பின்னால் ஒருகட்சியின் பெயர் இழுபடுகின்றதே தவிர அக்கட்சிகள், கட்சிகளுக் குரிய சுறுசுறுப்புச் செயற்பாட்டை வெளிப்படுத்துவனவாக இல்லை.

ஆக, தனித்தனிக் கட்சிகளே ஒரு கட்சிக்குரிய அடிப்படைச் செயற்பாட்டைக் கூட வெளிப்படுத்தாத நிலையில், அக்கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் ஐக்கியப்பட்டு செயற்படுகின்றமை பற்றியோ அல்லது ஏனைய தமிழ்க் கட்சிகளைத் தங்களுடன் வந்து இணைந்து செயற்படுமாறு அழைப்பதோ அர்த்தமற்றது; வேறு வார்த்தைகளில் கூறினால் அபத்தமானது.

கூட்டமைப்பைப் பொறுத்தவரை இன்னொரு முக்கிய குறைபாடும் உண்டு.

கூட்டமைப்பு என்பதும், அதன் செயற்பாடு, இலக்கு, நோக்கம் என்பவையும் அக்கூட்டமைப்பில் அங்கம் வகிக் கும் கட்சிகளினால் தீர்மானிக்கப்பட்டு, அதனடிப்படையில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு, செயற்படுத்தப்படவேண்டும். ஆனால் இங்கு அப்படி நடப்பதில்லை. பொதுத் தேர்தல் சமயத்தில் கட்சிகளின் கூட்டமைப்புப் பற்றிப் பேசுவார்கள். ஆனால் தேர்தல் முடிந்ததும் கூட்டமைப்பு என்பதும், அதன் அதிகாரங்கள் என்பவையும் 'ஓட்டோமற்றிக்காக' தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்களாகவும், விவகாரங்களாகவும் மாறிவிடுகின்றன.

கடந்த தேர்தலுக்கு முன்னர் கூட்டமைப்பு என்றால் அப்போதிருந்த 22 எம்.பி.க்கள் என்ற கருத்தே நிலவியது. இனி அது இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட 14 எம்.பி.க் களின் விவகாரமாகிவிடும்.

இப்படி மக்களின் - கட்சி உறுப்பினர்களின் - கட்சிகளின் - பங்களிப்பின்றி, வெறுமனே தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்களே 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற கருத்து நிலைப்பாடு நீடிக்கும் வரை -

அங்கத்துவக் கட்சிகளே தீர்மானம் எடுக்கும் சக்தியாக வும், அத்தீர்மானத்தைச் செயற்படுத்தும் விடயத்தில் பங்களிப்பவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்களும் மாறும் வரை -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் ஐக்கியம் சாத்தியமாகாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வெளியில் உள்ள கட்சிகளின் ஒன்றுபட்ட செயற்பாடும் சாத்தியமாகாது.

முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பை, முழு அளவில் தகுதியுடைய கூட்டமைப்பாக மாற்றிக் கொண்டால்தான், ஏனைய தமிழ்க் கட்சிகளையும் அதில் இணைப்பதும், ஒன்றுபட்ட தமிழர் தரப்புகளின் இணக்கப்பாடும் வாய்ப்பாகும்.

# நாடாளுமன்றம் செல்வார் ஜெனரல் பொன்சேகா; பகிரங்கமாகக் கருத்து வெளியிடச் சந்தர்ப்பம்

## மகிழ்ச்சி தெரிவிக்கிறார் பாரியார் அனோமா

கொழும்பு, ஏப். 14

தற்பொழுது இராணுவக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகத் தன் கருத்துக்களை வெளியிட்டுப் பேசுவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பொதுத்தேர்தலில் அவர் வெற்றி பெற்றிருப்பதால், நாடாளுமன்றச் சிறப்பு உரிமைகள் அவருக்குக் கிடைத்துள்ளன.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் ஜெனரல் பொன்சேகாவின் பாரியாரான அனோமா பொன்சேகா.

கடந்த பெப்ரவரி மாதம் முதற்கொண்டு கடற்படைத் தலைமையகத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜெனரல் பொன்சேகா, பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஒரு வேட்பாளராகப் போட்டியிட்டு 98,458 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் காரணமாக அவர் அடுத்துவரும் நாடாளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் வாய்ப்பையும் பெற்றுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் தமது கணவர் வெற்றி பெற்றிருப்பதானது அரசுக்கு எதிரான ஒரு விடயமே. அதேசமயம் எனது கணவரைப் பொறுத்தவரை அது ஒரு நல்ல விடயம்தான் என்று திருமதி அனோமா கூறினார்.

அவருக்காக நான் செய்துள்ளவை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். எனது கணவருக்கு நீதி கிடைக்கும் வரை தொடர்ந்தும் அவ்வாறே செய்யப்போகிறேன்.

அவர் கொழும்பில் ஒரு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்தபோது மௌனமாகப் புன்னகை புரிந்தார். அதே புன்னகைதான் அவர் போர் வெல்லப் பட்டுவிட்டது என்பதை அறிந்த போதும் வெளியிட்டிருந்தார் என்றார் அனோமா பொன்சேகா.

(ஒ-ப)

# அனைவரும் நிம்மதியாகக் கொண்டாடக்கூடிய சூழ்நிலையில் விகிர்தி புதுவருடம் பிறந்துள்ளது

## அமைச்சர் டக்ளஸின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம், ஏப். 14

இலங்கைத்தீவின் அனைத்து மக்களும் அச்சமற்ற சூழலில் நிம்மதியுடனும், மன நிறைவுடனும் வாழத் தயாராகும் இச்சந்தர்ப்பத்தில், தமிழ் - சிங்கள மக்களால் நிம்மதியாகக் கொண்டாடக் கூடிய சூழ்நிலையில் விகிர்தி புதுவருடப் பிறப்பு அமைந்துள்ளமை மிகுந்த மகிழ்சியைத் தருவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்தகால அசாதாரணச் சூழலில் எமது மக்கள் பல வருடங்களுக்கான பின்னடைவுகளுடன் புதுவருடங்களைப் பற்றி எண்ணிப் பார்க்கவே இயலாத வகையில் துன்ப, துயரங்கள் சூழ்ந்த இருண்ட யுகத்தினுள் வாழ்ந்து வந்துள்ள நிலையில் இவ்வருடம் எமது மக்கள் ஒளிமயமானதொரு எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதற்குத் தயாராகி வரும் சூழலில் விகிர்தி புதுவருடம் பிறக்கின்றது என்றும் இந்தப் புதுவருடம் அல்லல் பட்டு வந்துள்ள எமது மக்களுக்கு நிம்மதியின் அரவணைப்பாக அமையும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இதுவரையில் தங்களது சொந்த இருப்பிடங்களில் குடியமர்த்தப்படாதிருக்கும் எமது உறவுகள் உடனடியாகக் குடியமர்த்தப்படுவதற்கும், சிறைகளிலும், புனர்வாழ்வு நிலையங்களிலும் உள்ள ஏனையவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவதற்கும் எமது மக்களின் அனைத்துத் தொழில் துறைகளும் சிறந்தோங்குவதற்கும் இந்தப் புதுவருடத்தில் நிச்சயம் வழிபிறக்கும் என்ற நம்பிக்கையுடன், தங்களது உறவுகளைப் பிரிந்து துன்பமடைந்திருக்கும் அனைவரினதும் துன்பங்கள் கூடிய விரைவில் விலகிவிடும் என்றும் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எம்மக்கள் அனைவருக்கும் ஒளி மயமான எதிர்காலத்திற்கான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (ஒ)

# அவுஸ்திரேலியா புலமைப்பரிசில் திட்ட கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்,14

நாடளாவிய ரீதியில் அவுஸ்திரேலியா புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பட்டப்பின் டிப்ளோமா மற்றும் முதுமாணிக் கற்கை நெறிகளுக்கு அரச அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிதித் திட்டமிடல் அமைச்சின் வெளிநாட்டு வளத் திணைக்களம் இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவோர் தெற்காசிய வதிவிட இணைப்பாளர் டாக்டர் திருமதி ஹேமமாலினி பாலிகா காரவுடன் தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட அலுவலராகவும் மூன்று வருட சேவையை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண் டும்.

மேலும் பட்டப்பின் தகைமைகளுடன் 45 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஐ.ஈ.எல்.ரி.எஸ்.(IELTS) பரீட்சையில் 6.5 புள்ளிபெற்றவர்கள் மட்டும் உடன் தொடர்புகொள்ளுமாறு வெளிநாட்டு வள பணிப்பாளர் நாயகம் ஏ.சூரியகொட தெரிவித்துள்ளார். (04-302)

# மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைகள் மிக விரைவில்

யாழ்ப்பாணம்,ஏப்,14

மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை விரைவில் மாவட்ட ரீதியில் பிரதேச செயலர் அலுவலகங்கள் ஊடாக இடம்பெறவுள்ளது.

தேச நிர்மாண உட்கட்டுமான அமைச்சின் செயலாளர் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஆள்சேர்ப்பு இடம்பெறும். ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்கும் பிரத்தியேகமான மக்கள் சபைச் செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த நடவடிக்கையை தொடர்ந்தே இந்த நேர்முகப்பரீட்சை நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச செயலகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், விவரங்கள் வந்துசேர்ந்ததன் பின்னர் நேர்முகப்பரீட்சை இடம்பெறும் எனவும், எனவே இது குறித்து தேச நிர்மாண அமைச்சிற்கு எவரும் கடிதங்கள் எழுதத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04-302)

# மக்கள் மீளக்குடியேறிய கிராமங்களில் உட்கட்டமைப்புத் திட்டப் பணிகள்

யாழ்ப்பாணம்,ஏப்,14

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்த கிராமங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் உட்கட்ட மைப்புத் திட்டத்தின் கீழ் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ்வேலைத் திட்டங்கள் கொடுப்பனவுக்கான வேலைத் திட்டத்தின் கீழ் விரைவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

வாய்க்கால், குளங்கள், வடிகால்கள், மயானங்கள், வீதிகள், பிரதேசங்கள் போன்றவற்றைப் புனரமைத்தல் வேலைகள் இடம்பெறவுள்ளன.

தொழிலாளர்களுக்கு கூலியாக நாளொன்றுக்கு 550 ரூபா வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் இதற்கான மதிப்பீடுகள் இடம்பெறுகின்றன.

மேற்படி வேலைத்திட்ட விவரங்கள் பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் வேலைகள் துரித கதியில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (04-302)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை | 02 15.04.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி | : பிரதமை |
| | பி.ப. 06.36 வரை |
| நட்சத்திரம் : | அச்சுவினி |
| | மா. 06.33 |
| சுபநேரம் : | 07.34-09.04 வரை |
| ராகுகாலம் : | 01.34-03.04 வரை |

# வலிகாமம் பகுதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு அமைச்சு வழங்கிய நிதியுதவி

கொழும்புத்துறை,ஏப்,14

வர்த்தக சந்தை அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சின் கருத்திட்டத்திற்கமைய வலிகாமம் பகுதி கூ.சங்கங்களுக்கு கூட்டுறவு அமைச்சினால் தலா 20 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி, நீர்வேலி கூட்டுறவுச் சங்கங்களுக்கே இந்த நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இக்கொடுப்பனவைப் பயன்படுத்தி வலி.கிழக்கு,வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சிறுப்பிட்டியில் தமது களஞ்சியக் கட்ட டத்தில் அரைக்கும் ஆலையை அமைக்கவுள்ளது.

அதேவேளை வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி வடக்கிலுள்ள மினிகோப் சிற்றிக்கு அருகில் அரைக்கும் ஆலையொன்றை அமைக்கும் பணியிலும் துரிதமாக ஈடுபட்டுவருகின்றது. இவ்விரு அரைக்கும் ஆலைகளிலும் அரிசி, மிளகாய், தானியவகைகள் அரைக்கப்பட்டு பொதி செய்து சந்தைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(50-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pre School வகுப்புகள்
(ஆங்கில மொழிமூலம்)

பாடசாலையில் ஆங்கில மொழிமூலம் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைய ஆரம்பிக்கப்படுகிறது

வகுப்புகள் : 1,2,3,4 & 5

SUBJECTS *Maths, Enviorment Studies, English, Computer, Elocution.*

எமது புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கற்கைநெறிகளில் இணையும் மாணவர்களின் ஆங்கிலப் புலமை விருத்திசெய்யப்பட்டு அவர்களின் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளுக்கு எம்மால் உத்தரவாதம் அளிக்கப்படும்

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No.15, 2/1, Sirambiyadi Lane,Off Stanley Road, Jaffna
Tel :021-2224550, 0777222422, 0714299935, 0773501499
Email :info@bchs.lk



# வேலையாள்கள் தேவை

LDP, STP அனுபவமுள்ள பொலித்தீன் (Shoping Bag) மெசின் ஒப்பிரேற்றர் தேவை.

தொடர்புக்கு: சேகர் குளிர் ஊற்று
இல. 400, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 6634



# காணி விற்பனைக்கு

யாழ்.நகருக்கு சுமார் 4 Km தூரத்திலும் நல்லூர் கோயிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3 ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய 4¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண்டாகப் பிரித்துக்கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்:
தொ.பே: 0772469015,
0725682849, 0786711952. (96907)



# German, Swiss Deutsch மொழி வகுப்புக்கள்

மேற்படி வகுப்புகள் வருகிற வைகாசி மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு:
MISS,Kajenthini.S
No-55,Somasundram Lane,
Chundukuly, Jaffna.
(யாழ்.கச்சேரிக்கு அருகாமையில்)
தொ.பே: 0771604823


# தேவாலய நிறைவு தினம்

யாழ்ப்பாணம்,ஏப்.14

தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலயத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவு தினம் கடந்த சனிக்கிழமை தேவாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.ஆதீன பேராயர் கலாநிதி டி.எஸ். தியாகராசா இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார்.

முன்னாள் பேராயர் அதிவண. சுப்பிரமணியம் ஜெபநேசன் எழுதிய சாவகச்சேரி திருச்சபையின் வரலாறு எனும் நூல் வெளியீடும் இடம்பெற்றது. (ஒ-207)


நாளை ஆரம்பம்
O/L Day - A/L - 2012
காலை - 07.00
நியூ கேம்பிறிச்
அளவெட்டி
தரம் – தகுதி – திறமை



நாளை ஆரம்பம்
O/L Day - A/L - 2012
காலை - 07.00
SUBRA (14)
வட்டுக்கோட்டை - சித்தன்கேணி
தரம் – தகுதி – திறமை



# முன்பள்ளி பாடசாலை
(Maria Montessori Method)

| Class | Age | Time |
|---|---|---|
| Lower Nursery | 2½ - 3 | 8. 30 a.m 11.00 a.m |
| Upper Nursery | 3 - 4 | 8. 30 a.m 11.30 a.m |
| Pre - Grade | 4 - 5 | 8. 30 a.m 12.00 a.m |



100% ஆங்கிலத்தில் பயிற்சி

பயிற்றுவிக்கும் முறைகள்
* ஆங்கிலத்தில் பேச்சு பயிற்சிகள்
* (Audio & Video Visual) மூலமாக பாட்டு, கதைகள்
* கணனி தொடர்பான அறிவுசார் விளையாட்டுக்கள்
* பாரம்பரிய கதைகள், வரைதல், கைவேலைகள்
* இசைக்கருவி பயிற்சிகள் (Guitar, Keyboard)

100% எதிர்காலக் கல்வியில் வெற்றி

இன்றைய நவீன யுகத்திலே சிறு பிராயத்திலிருந்தே மாணவர்களின் ஆங்கில / தமிழ் அறிவை புதிய தொழில் நுட்பங்களுக்கேற்றவாறு விருத்தி செய்வதனூடாக எதிர்காலத்தில் அவர்கள் வளமான ஒரு வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கமைவாக அவர்களை தயார்ப்படுத்தும் செயல் திட்டமே எமது முன்பள்ளிப் பாடசாலை

**BRITISH College of Higher Studies**
No.15,2/1, Sirambiyadi Lane,Off Stanley Road, Jaffna.
Tel: 021 2224550 HotLines: 0773501499 / 0777222422 Email: info@bchs.lk


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 | 14 |
| ★ | ★ |
| 05 | 04 |
| ★ | ★ |
| 1923 | 2008 |



அமரர்
## ஏகாம்பரம் சோமசுந்தரம்

வையகம் மேன்மையுற்று போற்ற
பெருமையுடன் வாழ்ந்து காட்டி
அன்பாலும் பண்பாலும்
உள்ளங்களைக் கவர்ந்து
பிரிவு என்னும் துயரைத் தந்து
நீண்ட தூரம் சென்றதேனோ

மனைவி:
சோ.இராஜேஸ்வரி (தாத்தோ).
ராஜஸ்தான், வதிரி. (92219)


உ
ஓம் சக்தி





நல்லூர் வெற்றிஸ்ரீ பத்தநாச்சி அம்மனின் அருள் வேண்டி ஆசிகூறி வாழ்த்துகின்றேன்

இன்று பிறக்கவிருக்கும் விகிர்தி வருட சித்திரைப் புத்தாண்டில் இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று மகிழ்ச்சியோடிணைந்த மங்களகரமான வாழ்க்கையை வாழவேண்டுமென ஆதி பராசக்தியாக விளங்குகின்ற ஸ்ரீ பத்தநாச்சி அம்மனின் பாதாரவிந்தங்களைப் போற்றி வணங்கி வாழ்த்தி அருளாசிகளை வழங்குகின்றேன்.

வாழ்க வளமுடன்.
ஸ்ரீ பத்தநாச்சி அம்மனைச் சரணடைந்தால் பார்போற்ற வாழலாம்.
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

அம்மன் பணியில் நிற்கும்
பிரம்மஸ்ரீ சோ.கேதீஸ்வரசர்மா
(ஆலய பொறுப்பாளரும் பிரதம குருவும்).

ஸ்ரீபத்தநாச்சி அம்மன் கோயில்,
நாவலர்வீதி (நல்லூர் தெற்கு), யாழ்ப்பாணம்.


# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 01 | 14 |
| ★ | ★ |
| 02 | 11 |
| ★ | ★ |
| 1941 | 2003 |



## திருமதி இராஜேஸ்வரி கனகராசா
(இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

எம்மை அன்புடனும், பண்புடனும் வளர்த்து நல்லறிவு ஊட்டி நல் ஆசான்களாக்கி அகிலத்தில் எம்மை தலை நிமிரவைத்த எம் அன்புத் தாயே! நல் மனைவியாய், நல் மாமியாய், நல் அப்பம்மாவாய், எம்முடன் வாழ்ந்த எமது அன்புத் தெய்வமே! ஏழு ஆண்டுகளென்ன எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உம் நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது.
என்றென்றும் உம் நினைவுடனேயே வாழும்...

கணவர்: கனகராசா
மக்கள்: ஜெயரூபன், கஜந்தன், மயூரன்,
மருமக்கள்: பத்மலோதினி (அம்மன்),
கவிதா, தரணி,
பேரப்பிள்ளைகள்: கீர்த்தனா, கஜானன், கஜனி.

தாரிக்கப்பற்று,
நெல்லியடி.


# Computer Express
**Institute of Information Technology**

புதுவருடத்தினை முன்னிட்டு மாபெரும் புலமைப்பரிசில் 2010

பாடசாலை மாணவர்கள், கணனி ஆர்வலர்கள், அரச ஊழியர்கள் நலன்கருதி அனைத்து கணனிக்கற்கை நெறிகள் புதுப்பொலிவுடன் ஆரம்பமாகின்றன

80% off

- Professional Diploma in Microsoft Office — 3500/= — 3 Months
- Diploma in Printing Technology & Desk-top Publishing — ~~22500/=~~ 4500/= — 4 Months
- Diploma in Server Technology & Web Page Designing — ~~22500/=~~ 4500/= — 3 Months
- Diploma in Graphic Designing & Adverdisement Marketing — ~~22500/=~~ 4500/= — 4 Months
- Diploma in Hardware Engineering & Net-working — ~~20000/=~~ 4000/= — 3 Months
- Diploma in Computerized Accounting & E-Commerce — ~~22500/=~~ 4500/= — 3 Months
- Diploma in Computer Science & Programming — ~~22500/=~~ 4500/= — 4 Months
- Diploma in Auto CAD & Arcetecture Designing — ~~22500/=~~ 4500/= — 3 Months
- Honours Diploma in Information Technology — ~~32500/=~~ 6500/= — 6 Months

100% செய்முறைப்பயிற்சி
தகுந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களினால் வகுப்புகள் நடாத்தப்படும்

50 % Advance Courses
- Diploma in Film Technology & Video Editing — ~~10000/=~~ 5000/= — 4 Months
- Diploma in Studio Technology & Multi Media — ~~9500/=~~ 4750/= — 4 Months

எமது அப்பியாசத்தில் கம்பியூட்டரின் உட்தொழில்நுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்பியூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

No.167, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 021 222 8250

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| Batch I | 16/04/2010 | 9 A.M. / 3 P.M. |
| Batch II | 17/04/2010 | 9 A.M. / 3 P.M. |
| Batch III | 18/04/2010 | 10 A.M. / 3 P.M. |
| Batch IV | 20/04/2010 | 9 A.M. / 3 P.M. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொமர்ஷல் வங்கியின் 'அருணலு' சிறுவர் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பிரதான கிளையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கள விளக்கேற்றுவதை முதற்படத்திலும் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் ச.ரவீந்திரா உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் அருட்திரு நோயல் விமலேந்திரன் சித்தியடைந்த மாணவனுக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும், பரிசில் பெற்ற மாணவர்கள் வங்கி அதிகாரிகள் மற்றும் விருந்தினர்களுடன் நிற்பதை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள் : சுகந்தன்)*

# மாபெரும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 18ஆம் திகதி முதல் யாழ். மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஏப்.14

'யாழ்ப்பாணத்துக்கான உங்கள் நுழை வாயில்' என்ற தொனிப் பொருளில் சர்வ தேச வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடை பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வர்த்தக கண்காட்சி கைத்தொழில் மன்றமும் வரையறுக்கப் பட்ட இலங்கைக் கண்காட்சி மற்றும் 'மாநாடுகள், சேவைகள் தனியார் நிறுவன மும் இதனை ஏற்பாடு செய்துள்ளன. யாழ். மாவட்டத்தில் நலிவடைந்திருக்கும் கைத் தொழில் துறையினை மேம்படுத்துவத னூடாக வேலையற்றிருக்கும் பல்லாயிரக் கணக்கான இளைஞர், யுவதிகளுக்குப் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்ற பிரதான நோக்குடன் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் அனைவரும் பங்கு பற்றிப் பயனடையுமாறு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது.

சுமார் 200 காட்சிக் கூடங்களைக் கொண்டதாக அமையவுள்ள இக்கண் காட்சியில் இந்தியாவைச் சேர்ந்த முன்னணி கைத்தொழில் சேவைகளை வழங்கும் நிறு வனங்களும் இயந்திர சாதன உற்பத்தி சேவைகளை வழங்கும் நிறுவனங்களும் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது. (50-16)

# இன்றைய போட்டிகள்

வலி.வடக்கு,ஏப்.14

மஞ்சி பிஸ்கட், நெஸ்ரோமோல்ட், ஐ.ரி.எம் நிறுவனங்களின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட படையணியும் யாழ்.செய லகமும் இணைந்து நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் நடைபெறவுள்ள நிகழ்வுகளின் விவ ரங்கள் வருமாறு:

சறுக்குமரம் ஏறுதல், தேங்காய் திரு வுதல், தேசிக்காய் கரண்டியில் கொண்டு ஓடுதல், தடைதாண்டல், சாக்கு ஓட்டம், யானைக்கு கண் வைத்தல், தலையணைச் சண்டை, விநோத உடைப் போட்டி, முட் டைபிடித்தல், கயிறு இழுத்தல் (பெண் கள்) கபடிப் போட்டி, ஆணழகன் போட்டி.

கபடிப் போட்டியில் தெல்லிப்பளை பிர தேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதிக்கொள்ளவுள் ளன. (50-86)

# யாழ்.நகரில் நடைபாதை வியாபாரம் இந்த வருடம் சோபிக்கவில்லை

யாழ்ப்பாணம், ஏப்14

சென்ற ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்தப் புதுவருடத்துக்கான நடைபாதை வியாபாரம் யாழ்.நகரில் மந்த நிலையிலே காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதற்கு நடைபாதை வியாபாரிகளின் வருகை குறைவாக இருப்பதே முக்கிய மான காரணமாகும்.

தற்போது முனீஸ்வரன் வீதியில் புல் லுக்குளம் அருகேயும் முனீஸ்வரன் ஆலய சுற்றாடலிலும் முற்றவெளிப் பகுதியிலும் இதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நடைபாதை வியாபாரிகள் தாம் கொண்டு வந்த உடுபுடைவைகளை விற்பனை செய்து வருகின்றனர்.

இதேசமயம் நல்லூர் ஆலயச் சுற்றாட லில் நடைபாதை வியாபாரம் அமோகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-224)

# யாழ்.கோட்டை முன்றிலில் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.14

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் நேற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ்.கோட்டையின் வெளிப்பக்க முன் றிலில் ஆரம்பமாகின.

யாழ்.மாவட்டப் படையணியினரும் யாழ்.செயலகமும் இணைந்து இந்த விளை யாட்டு மற்றும் கலை நிகழ்வுப் போட்டி களை நடத்துகின்றன.

யாழ்.கோட்டை முன்றில் இந்தப் போட்டி களுக்காகத் தேசியக் கொடிகளால் அலங் கரிக்கப்பட்டிருந்தது. அங்கு பல்வேறு போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

அதனைவிட கோட்டை முன்றிலில் விசேடமாக அமைக்கப்பட்ட அலங்கார மேடையில் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (50-224)

# திருநெறிய தமிழ்மறைக் கழகத்தின் பண்ணிசைப் போட்டி மே 2இல்

யாழ்ப்பாணம்,ஏப்,14

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளை யார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திரு விழாவை முன்னிட்டு திருநெறிய தமிழ் மறைக் கழகம் நடத்தும் பண்ணிசைப் போட்டி அடுத்த மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு மேற்படி ஆலய மணிமண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான விண்ணப்பங் களை எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்கு மாறு கோரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் 4ஆம்,5ஆம்,6ஆம் தரங்களில் கற்கும் மாணவர்கள் கீழ்ப்பிரி விலும், 7ஆம், 8ஆம்,9ஆம் தரங்களில் கற் கும் மாணவர்கள் மத்திய பிரிவிலும் 10ஆம், 11ஆம், 12ஆம் தரங்களில் கற்கும் மாண வர்கள் மேற்பிரிவிலும் பங்குபற்ற முடியும்.

இந்தப் போட்டிக்குரிய விண்ணப்பப் படிவங்களை 'திருமதி வை.கணேசபிள்ளை, ஓய்வுபெற்ற ஆசிரியை, அமைப்பாளர், திருநெறிய தமிழ்மறைக்கழகம், இணு வில் தெற்கு, இணுவில்', 'மணிமண்டபம் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோயில், இணுவில் தெற்கு, இணுவில்', 'பொது நூலக சனசமூகநிலையம் இணுவில்' ஆகிய முகவரிகளுக்கு மாணவர்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளனர்.

(50-204)

# முற்றவெளியில் தனியார் பஸ் ரயர் வெடித்ததால் மக்கள் பீதி

யாழ்ப்பாணம்,ஏப்.14

சுற்றுலாப் பிரயாணிகளை ஏற்றிவந்த தனியார் பஸ் வண்டியின் பின் ரயர்கள் பாரிய சத்தத்துடன் வெடித்ததால் பீதிய டைந்த மக்கள் சிதறி ஓடியதாகத் தெரி விக்கப்பட்டது.

நேற்றுக்காலை முற்றவெளிப் பகுதியி லேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியால் சென்று கொண்டிருந்த மக்கள் வெடிச்சத்தம் கேட்டு பீதியடைந்த நிலை யில் நாலாபக்கமும் சிதறி ஓடத் தொடங்கி யதாகவும் பின்னர் உண்மை நிலை அறிந்து வழமைக்குத் திரும்பியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-224)

# மண்டைதீவு கடற்றொழிலாளர்களுக்கு 'கூலர்' வாகனம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்

யாழ்ப்பாணம், ஏப்.14

மண்டைதீவு கடற்றொழிலாளர் கூட்டு றவுச் சங்கத்தினர் முன்வைத்த கோரிக் கைக்கு அமைவாக குளிரூட்டி வாகன மொன்றை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா வழங்கியுள்ளார்.

மண்டைதீவு கடற்றொழிலாளர் கூட்டு றவுச் சங்கத்தினர் தமக்கு குளிரூட்டி வாக னம் (கூலர்) பெற்றுத் தரப்படும் பட்சத்தில் தமது தொழில் மேலும் விருத்தியடையும் என்று ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

இதன் அடிப்படையில் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் மேற்படி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு குளிரூட்டி வாகனத்தை வழங்கினார்.(50)

# தீவகப் பகுதிக்கு குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,ஏப்.14

மண்டைதீவு மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பாரிய நெருக்கடி களைச் சந்தித்து வருகின்ற நிலையில் குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடி நடவ டிக்கை எடுத்துள்ளார்.

மண்டைதீவு மக்களின் தேவைக்கேற்ப குடிநீர் வழங்கப்படுவதில்லையென அமைச் சருக்கு அப்பகுதி மக்கள் தெரிவித்திருந் தனர்.

இதனையடுத்து பிரதேச சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம், மண்டைதீவு மக்கள் பிரதிநிதிகளுடனான கலந்துரையாட லொன்று அமைச்சரின் யாழ். பணிமனை யில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன் பிரகாரம் இன்று புதன்கிழமை முதல் தீவகம் முழுமையும் மக்கள் குடி தண் ணீரைப் பெற்றுக்கொள்ள சகல நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட்டன. (50)

# குடாநாட்டு வங்கிக் கிளைகளில் புதுவருடக் கொடுக்கல், வாங்கல்கள்

யாழ்ப்பாணம்,ஏப்,14

தமிழ், சிங்கள புதுவருடத் தினத்தை முன்னிட்டு குடாநாட்டின் அனைத்து வங் கிக் கிளைகளிலும் இன்று புதன்கிழமை விசேட கொடுக்கல், வாங்கல்களுடன் வாடிக்கையாளர்களுக்கான கைவிசேட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இதனை முன்னிட்டு ஒவ்வொரு வங் கிக் கிளைகளிலும் தமது வாடிக்கையாளர் களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர் களது வைப்புத் தொகையைப் பொறுத்து விசேட அன்பளிப்புப் பொருள்களையும் வழங்கவுள்ளன.

இதன்படி இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி என்பவற்றின் அனைத்துக் கிளைகளிலும் தமது புது வருடக் கொடுக்கல் வாங்கல் நடவடிக் கைகளுக்காக இன்று முற்பகல் 9மணி முதல் மதியம் ஒரு மணிவரையும் திறந்தி ருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை யூனியன் வங்கியின் யாழ்.கிளை முற்பகல் 9.30மணிமுதல் மதி யம் 12 மணிவரையும், சம்பத் வங்கி முற் பகல் 10மணிமுதல் மதியம் ஒரு மணி வரையும் திறந்திருந்து தமது புதுவருடக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுச் குத் திறந்திருக்கும். (50-16)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதிக்கு 'ஸ்கானர்' இயந்திரம்

## வழங்குவதற்கு இலங்கை வங்கி நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.14

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மகப்பேற்றுப் பிரிவுக்கு 'ஸ்கானர்' இயந் திரம் ஒன்றை வழங்க இலங்கை வங்கியின் வட பிராந்திய பிரிவினர் ஏற்பாடு செய்ய வுள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலக முன்னாள் திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் வங்கி யின் சாவகச்சேரி கிளையில் இடம்பெற்ற 'சனிக்கிழமைச் சேவை' நிகழ்வில் இது குறித்த வேண்டுகோளை விடுத்தார்.

அதனை ஏற்று வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் வீ.எஸ்.சிவ பாலன் கருத்துத் தெரிவிக்கையில் - மருத் துவமனைக்கு 'ஸ்கானர்' இயந்திரத்தின் அவசியம் பற்றி எமக்குத் தெரிந்திருக்கிறது. இது தொடர்பாக உரிய முறையில் கடிதம் கிடைக்குமாயின் வங்கியின் உயர் மட்டத் துடன் தொடர்பு கொண்டு 'ஸ்கானர்' இயந் திரத்தைப் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடு கள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

(04-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14.04.2010

# புதுவருட சிறப்பு மலர்

Happy new year

அனைவருக்கும் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்




RG இரத்தினகோபால்ஸ்
63,65, கஸ்தூரியார் வீதி, ரோட், யாழ்ப்பாணம்.

## மலரட்டும் ஆண்டு பத்து

கடந்து சென்ற வருடமதில் நடந்து வந்த பாதைகள்
திரும்பிப் பார்க்கையில்.... அஸ்தியாகிப் போன கனவுகளும்
அடையாளம் காணா அமைவுகளும்
கேள்விக் குறியான வாழ்க்கைகளுமே...
மீதமாக?... பிணங்களைத் தாண்டிவந்த
மனங்களின் நிலைமை எண்ணி
வேதனை கொள்ளக்கூட வேறு ஓர் உறவு இல்லை!....
''அந்த இறுதி நிமிடங்கள்'' நாளிதழ் நவின்றசேதி
நாடித் துடிப்பை யெல்லாம்
ஓர்கணம் உறைய வைக்க!.....
கடந்திட்ட வருடமிது
பகர்ந்திட்ட சேதியிவை
இனிவரும் இரண்டாயிரத்துப் பத்து
இனிய நற்சேதி தர
இறைவா உனைவணங்கி
வரவேற்றேன் ஆண்டு பத்தை!!

இரா.ஷிவநந்தசிறி
யாழ்.பல்கலைக்கழகம்.

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்
வரலாறு தரம் 9 - இளங்கோ
வரலாறு தரம் 9 - மயில்வாகனம்
விஞ்ஞானம் உயிரியல் பகுதி தரம் 10/11- (S.T.இமல்ராஜ்)
A/L தரத்திற்குரிய புதிய பாடத்திட்ட புத்தகங்கள் அனைத்தும் வெளிவந்துவிட்டன
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2573



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும் எம் இனிய
புதுவருட வாழ்த்துக்கள்
ரேடியோ, கசெற்ஸ், மின்விசிறிகள்,
VCD, DVD Player LCD T.V.
மின்சார வீட்டுப் பாவனைப் பொருள்
மற்றும் இலத்திரனியல்
உதிரிப்பாகங்களையும்
பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்.
திருத்திக் கொடுப்பதிலும்
விசேஷமான நிறுவனம்
Sony யாழ்.விற்பனை முகவர்
V.K.இராசரத்தினம்
ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். தொ.பே 021 222 2056

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்
யாழ்.நகரில்
வஜிதா
மனோகராத்தியேட்டருக்கு முன்பாக
மோட்டார் சைக்கிள் சேவிஸ் மற்றும்
திருத்தகம்.
(நாவலர் வீதியில்புகையிரதத்
தண்டவாளத்துக்கு அருகில் அமைந்துள்ளது)
இல. 512, கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர், வசந்தன் தொ.பே: 0779670441




தங்கம் உள்ளே
பணம் வெளியே
அதிகூடிய முற்பணம் குறைந்த வட்டி

24k - 27,000/-
22k - 24,000/-

ரூ 1000/- இற்கு மாதாந்த வட்டி
ரூபா 11.25 சதம் மட்டுமே.

உங்களின் விருப்பத்திற்கேற்ப 3,6,12 மாத வரையிலான காலத்தெரிவு
வரிசை இல்லை முத்திரை வரி இல்லை. ஆவணப்படுத்தல் தொல்லைகளும் இல்லை.
முழுமையான இரகசியத்தன்மை
மேலதிகப்பற்று/தனிநபர் கடன்/ கடனட்டைகளைவிட குறைந்த வட்டி
தெரிவு செய்யப்பட்ட வங்கிக்கிளைகளில்
சனி, ஞாயிறு தினங்களிலும் இச்சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.

புதுவருடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்து அழகான கோப்பிக் கோப்பை செற்றினை இலவசமாக எடுத்துச் செல்லுங்கள். இதற்கு மேலதிகமாக சீட்டிழுப்பில் தங்கப்பவுண்கள் 22 , ரூ 50,000/- பெறுதியான 10 பரிசில்களை வென்றிடுங்கள்.


★ஏப்ரல் 04 ஆம் திகதி தொடக்கம் மே 04 ஆம் திகதிவரை செலான் வங்கியில் ரூ 20,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை வைப்பு செய்யும் உங்களுக்கு பெறுமதியான கோப்பிக் கோப்பை செற்றொன்று பரிசாகக் கிடைக்கும்.

★நீங்கள் வைப்புச் செய்யும் ஒவ்வொரு 1000/- ரூபாவிற்கு பரிசு பெறும் வாய்ப்பு உதாரணம் ரூ 20,000/- வைப்பு செய்யின் 20 வெற்றி வாய்ப்புக்கள்

★முதல் பரிசாக தங்கப் பவுண்கள் 22

★ரூ 50,000/-பெறுமதியான பரிசுகள் 10

பிறக்கப்போகும் தமிழ் சிங்களப் புத்தாண்டில் கைநிறைய பரிசுகளைப் பெற செலான் வங்கிக்கு வாருங்கள்.




மேலதிக விபரங்களுக்கு
அழையுங்கள் 2 456 927

செலன்

உங்களுக்கு அவசரமாக பணம்
தேவைப்படும் போது மிகவும் விரைவான
சேவை செலான் அடகுச் சேவை மட்டுமே!

★ நிபந்தனைகளுக்குட்பட்டது

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 14.04.2010 புதுவருட சிறப்பு மலர்

Happy New Year

# இங்கிதமாய்ச் சென்றுசேர்!

இப்புவியை விட்டின்று இரண்டாயிரத் தொன்பதே
தப்பித்தேகு சீன்றாய்நீ தரணியோர் வாழ்விலினி
ஒப்பரும் பேறெலாம் ஓங்கியே வளர்ந்திடவே
இப்பெரும் புவிவிட்டு இங்கிதமாய் சென்றுசேர்

பார்மிசை யுன்பாதம் பதிந்திட்ட நாளெல்லாம்
போர்முரசு கேட்டுநாம் புழுங்கியே போனோம்
ஏர்பூட்டி நாமுழுத ஏற்றமிகு நிலமெங்கும்
போர்வெடி சூழ்ந்த நிலையகலப் போய்வா

இத்தரையில் எம்தமிழர் ஏற்றமுடன் இனிவாழ
நித்தமும் நல்வழியை வருமாண்டு காட்டிடவே
சத்தமும் சந்தடியும் தானகன்று சென்றிடவே
இத்தரை விட்டகன்று இங்கிதமாய் சென்றுசேர்

போர்க்களத்தில் மடிந்திட்ட புண்ணியர்கள் சாந்திபெற
பார்க்களத்தில் இனிவரும் புத்தாண்டில் முயன்றிடவே
சோர்வின்றிச் சுறுசுறுப்பாய் சூழ்புவி விட்டகலப்
பார்மிசை நாமெலாம் பணிவோடு அனுப்புவமே

இல்லிடம் தனையிழந்து ஏதிலியாய் ஏங்கிநிதம்
சொல்லொணாத் துயரோடு சோர்வுறும் மக்களெலாம்
நல்வாழ்வு பெற்றிங்கு நலமெலாம் பெற்றிடவே
சொல்லாமல் நீயுமினிச் சோர்வின்றிச் சென்றுசேர்



HAPPY NEW YEAR

செ.சுதாகரன், மட்டுவில் வடக்கு.


அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

செ.இராசரட்ணம்

நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாக உற்பத்தியாளர்

S.R.P பம்புகள்

கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில், தாவடி.

HAPPY NEW YEAR

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்



சிறுவர்கள் மற்றும் அனைவரும்
நங்கையர் நாடும்
நவநாகரிக புடைவைத் தினுசுகளுக்கு

ஹரன் புடைவையகம்

பலாலி வீதி, திருநெல்வேலி.
தொ.பே: 021 222 2697

Happy New Year



அசல் 22 கரட் நகைகளை விரும்பிய
டிசைன்களிலும் குறித்த தவணையிலும்
செய்துபெற்றுக்கொள்ள

திருவருள் நகைமாடம்

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.
தொ.பே: 0776181416

நல்லூர்

சரவணா ரெக்ஸ்

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி)
சிவன்கோயிலுக்கு அருகில், யாழ்ப்பாணம்.



அனைவருக்கும்
எமது புதுவருட
வாழ்த்துக்கள்



ரகங்கள் பல விதம் தரத்தில் முதலிடம்

- இந்தியன் பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள்
- இந்தியன் பன்சி சாறிகள்
- இந்தியன் கொட்டன் சாறிகள்
- இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள்
- இந்தியன் சில்க்ஸ் சாறிகள்
- இந்தியன் சில்க் பஞ்சாபித் துணி
- கொட்டன் பஞ்சாபி துணி
- பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபித் துணி
- சேட், ரீசேட்
- ரெடிமேற் ஆடைகள், சாறிபிளவுஸ்
- துணிகள் சகல கலர்களிலும் உள்ளன.
- மற்றும் விதம்விதமான சாறிகள் ஏராளம், ஏராளம்.

புதுவருடத்தை முன்னிட்டு
புத்தம் புதிய தெரிவுகள் விசேடமாக
இறக்குமதி செய்யப்பட்டு
விற்பனையாகிறது. தெரிவுகளுக்கு
இன்றே விரையுங்கள்

குறிப்பு:
புதுவருடத்தை முன்னிட்டு தினசரி
வாடிக்கையாளர்களின் நலன்கருதி காலை
8 மணி முதல் இரவு 9 மணி வரை
வியாபாரம் நடைபெறும்.

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

இன்றைய நவநாகரிக பாதணிகளின் தரமான தெரிவுகளுக்கு
தனிச்சிறப்பு பெற்ற ஒரே ஸ்தாபனம்



நாதன்ஸ் சூ பலஸ்

இல.17, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.





சப்பாத்துக்கள், உடுப்புவகைகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றிட

அபிராமி மல்ரி சென்ரர்

இல.127/3, யுப்ளி பசார்,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222858, 0776615973



அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

அற்புதா ரேடிங் கொம்பனி, மல்ரிப் பிளேஸ்

சகலவிதமான ஆடம்பரப் பொருள்கள், துவிச்சக்கரவண்டி அதன் உதிரிப்பாகங்கள்,
வீட்டுத் தளபாடங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் உபகரணங்கள் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

198, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14.04.2010

# புதுவருட சிறப்பு மலர்

## விகிர்தி வருடமே வருக!

விரைந்தோடி மறையுது விரோத வருடம்
வினை தீர்க்க வருகிறது விகிர்தி வருடம்
எம்மிடர் தீர ஏது செய்யவேண்டும்
எம் பெருமான் நல்லூரா உன்னருள் புரிவாயே!

வசந்தம் வீசுமென்று அரசு கூறுகிறது
வாழ்க்கை மாற்றமென்று சோதிடம் கணிக்கிறது!
எவ்வழி நல்வழியாக தென்பட்டாலும்
எம்மின மக்கள் ஐக்கியப் படுவார்களா?

ஆட்சி மாற்றம் வேண்டுமென ஆருடம் கூறுகிறார்
ஆளும் தரப்பினரோ அசையாது ஆட்சி என்றார்
நல்லது நடக்கவேண்டுமென நாங்கள் துதிக்கிறோம்
நல்லையம் பதியானே நனையை உலகு உனது கரங்களில்

கந்த ஞானமுத்து
கைதடி மேற்கு -02.

அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள்
யாவும் நியாய விலையில்பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
ஆர்.வி.ஜி.மருந்தகம், பீடிகள்
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222129
R.V.G.ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே 222 6606

அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

சகலவிதமான
கட்டடப் பொருள்கள்
நியாய விலைக்கு
குறித்த நேரத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.
CEMENT
ரமணன்
கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையம்
525, 528 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 0212229296.

அனைவருக்கும் எமது
புதுவருட வாழ்த்துக்கள்

துர்க்கா
நகைப்பூங்கா
*உங்களுக்கு வேண்டிய அழகிய அசல் தங்க நகைகளை விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் வடிவமைத்துத் தருபவர்கள்.
*ஒடர் நகைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது
புதுவருட வாழ்த்துக்கள்.

அசல் 22 கரட்
தங்க நகைகள்
விரும்பிய
டிசைன்களில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
ஆசைப்பிள்ளை
அன் சன்ஸ் நகைமாடம்
இல.10 பஸ் நிலையம் முன்பாக, சங்கானை

அனைவருக்கும் உளம் கனிந்த புதுவருட வாழ்த்துக்கள்
சிறி நதியா டிஜிட்டல் கலர்லாப்
நகைமாளிகை
இல.01 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வீடியோ & ஸ்ரூடியோ
லக்ஸன் பிளாஸா கட்டடம், 108 A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8412

இணை நிறுவனம் : சிறி நதியா நகை மாளிகை 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எம் இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்
சிறி மதனா
நகை மாளிகை
மதனா
ஜூவல்லறி
இல.155/M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே:2227772
இல.177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 2225526

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்
Manufacturers of Gold Jewels
பூரணி நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
வின்சர் தியேட்டர் அருகாமை,
இல:1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14.04.2010

புதுவருட சிறப்பு மலர்

# அருகி வரும் தமிழர்களது பழைய பண்பாட்டு நடைமுறைகள்

வரலாற்றில் குடாநாட்டு மக்களின் கோயில் வழிபாடுகள் தனித்துவங்கள் பல மிக்கவையாக விளங்கியுள்ளன. முதலில் உண்மையான பக்திக்கும் தூய்மைக்கும் முதலிடம் கொடுக்கப்பட்ட காலமாக அந்தக்காலம் விளங்கியது. மரத்தினாலான பனம் நார் பொருத்திய முன்னுக்கும் பின்னுக்கும் பாதம் பதித்த மிதியடிக்கட்டைகளில்தான் முதியவர்கள் கோயிலுக்குச் செல்வது வழக்கம். பூசகர்கள் குமிழ் மிதியடிக் கட்டைகளை உபயோகத்தில் வைத்திருந்தனர். நூற்றுக்கு நூறு வீதம் வழிபடுவோர் கோயிற்கிணற்றில் கால், கை அலம்பாமல் கோயிலுக்குள் செல்வதில்லை. கோயில் கபாடத்தில் தொங்கும் விபூதிக் குடுவையில் இருந்து வெண்நீறணிந்து சந்தனக் கல்லில் தூய மைசூர் சந்தனக் கட்டையால் அரைத்த கமகம என மணம் கமழும் சந்தனத் திலகம் அணிந்தே வழிபாடியற்ற ஆரம்பிப்பர்.

இவ்விடத்தில் ஒரு விடயம் முக்கியமாக நினைவு கூரத்தக்கது. அக்காலத்தில் விபூதி எனப்படுவது ஸ்ரீலஸ்ரீஆறுமுக நாவலர் அவர்கள் கூறிய வாறு பசுவின் சாணம் கொண்டு தயாரிக்கப்பட்ட தூய வெண்நீறேயாகும். இதை நெற்றி முழுவதும் பட்டை பட்டையாகப் பூசும் பொழுது கபாலம் சம்பந்தமான நோய்கள் எதுவும்வராது தடுக்கப்படுகின்றன என்பதையும் தூய சந்தனம் கொண்டு பொட்டு அணிவதால் அதேபோன்று கண்கள் பாதுகாக்கப்படுகின்றன என்பதையும் எமது முன்னோர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

**சட்ட விளக்குகள்**

பழங்காலத்தில் திருவிளக்கேற்ற இலுப்பை எண்ணெய் உபயோகிக்கப்பட்டது. ஆதிமூல மண்டப வாசல்களில் ஐந்து அடுக்கு அல்லது மூன்றடுக்குச் சட்ட விளக்குகள் வரிசை வரிசையாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்க, பூசகர் மூலமூர்த்திக்குத் தீபாராதனை செய்யும் பொழுது கோயில் முழுவதும் பக்திப் பரவசம் மேலோங்கி நிற்கும். எவரும் தீபாராதனைகளின்போது பக்கத்தில் நிற்கும் எவருடனும் கதைப்பது கிடையாது.

**புராணப் படிப்புகள்**

குடாநாட்டுத் திருக்கோயில்களே அன்றெல்லாம் பாடசாலைகளாகவும் விளங்கின. வருடம் முழுவதும் ஏதோ ஒரு புராணப்படிப்பு கோயில்களில் நிகழ்ந்த வண்ணம் இருக்கும். கந்த புராணத்தைப் படிப்போரும் அதற்குப் பயன் சொல்வோரும் நிறையவே இருந்துள்ளனர். இராமாயணம், மகாபாரதம், பெரிய புராணம், விநாயகர் புராணம் முதலியவை ஒன்று மாறி ஒன்று கோயில்களில் படிக்கப்படுவதுண்டு. இதன் காரணமாக சாதாரண மக்கள்கூட மிகுந்த அறிவுள்ளவர்களாக விளங்கினர்.

**பராமரிப்பு**

கிராமத்தில் விளையும் நெல், தினை, குரக்கன், வரகு முதலியவற்றில் ஒரு பகுதியை மக்கள் கோயிலுக்கு உபகரித்தனர். அவற்றின் மூலம் பெறப்பட்ட வரும்படி கொண்டே திருக்கோயில்கள் அனைத்தும் பராமரிக்கப்பட்டன. பூசகர்களின் ஊதியமாகவும் அவையே உபகரிக்கப்பட்டன.

**சம்பிரதாய சங்கீதம்**

குடாநாட்டு மக்களைப்போல சம்பிரதாய சங்கீதத்தைப் பேணியவர்கள், நயந்தவர்கள், அனுபவித்தவர்கள், வளர்த்தவர்கள் வேறு எவரும் இலர் என நாதஸ்வர மேதை காரைக்குறிஞ்சி அருணாசலம்பிள்ளை அவர்கள் ஒரு சமயம் என்னிடம் கூறினார். இவர் தனது ஆரம்ப வாழ்வில் நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் ஆஸ்தான வித்துவானாகப் பணியாற்றியவர், திருவிழாப் பட்சம் ஆரம்பமாகிவிட்டால் பகல் பகலாக, இரவிரவாகத் திருவிழாக்கள் நடைபெற்ற அந்தக்காலத்தில் நாதஸ்வர இசையில் ஆறு மாதங்கள் மூழ்கிக்கிடக்கும் பண்பினர் குடாநாட்டு மக்கள் என்பது காரைக்குறிஞ்சியாரின் அவதானிப்பாகும்.

**அபார ஞானம்**

அந்தக் கால மக்களுக்குச் சம்பிரதாய சங்கீதத்தில் அபார ஞானம் இருந்தது. ஒரு சமயம் கோண்டாவில் மஞ்சத்தடி ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலில் வருடாந்த உற்சவ மாலைத் திருவிழாவில் அளவெட்டி என்.கே.பத்மநாதன், கோண்டாவில் வி.கே. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள், இணுவில் கே.ஆர்.சுந்தரமூர்த்தி ஆகியோர் ஒருங்கு சேர வாசித்துக் கொண்டிருந்தார்கள். எனக்குப் பக்கத்தில் தொண்ணூறு வயது மதிக்கத்தக்க முதியவர் கச்சேரியை நன்கு இரசித்துக் கொண்டிருந்தார். அவரது வேட்டி, சால்வை அவரை ஒரு கமக்காரர் என்பதை எனக்கு உணர்த்தியது. ஒரு கட்டத்தில் அவர் என்னைத் திரும்பிப் பார்த்து "எடேய் பிள்ளை, இப்ப வாசிக்கிறது என்ன இராகம் தெரியுமோ?" எனக் கேட்டார். எனது முகபாவனையைப் புரிந்துகொண்ட அவர், அவர்கள் தோடி இராகத்தை வாசிக்கிறார்கள் என்றும் வாசிப்பு மெத்த உச்சமாக இருக்கிறதென்றும் மெய்சிலிர்த்தார். இது அந்தக் கால சங்கீத ஞானத்திற்கு ஓர் உதாரணம்.

அன்றெல்லாம் மாவிட்டபுரம் ராசா, மாவிட்டபுரம் உருத்திராபதிபோன்ற நாதஸ்வரக் கலைஞர்களைப் பார்த்து எவரும் பாட்டு வாசிக்கும்படி கேட்பதில்லை. அப்படிக் கேட்கவே வெட்கப்படுவார்களாம் அந்தக் காலத்தில்.

**காலம் தந்த கோலம்**

கோண்டாவில் நெட்டிவிப்பாய் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவ மாலைத்திருவிழாவொன்றிற்கு இணுவிலைச் சேர்ந்த நாதஸ்வர, தவில் குழுவொன்று வந்திருந்தது. கோயில் கிழக்கு வாசலையுடையது. சுவாமி எழுந்தருளி வெளிவீதியில் தென்கிழக்கு மூலைக்குவர ஆயத்தமானபோது சில இளைஞர்கள் வந்து இயக்கப்பாட்டுகளை வாசிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். தெற்கு, மேற்கு, வடக்கு வீதியில் அரைவாசியில் இயக்கப்பாட்டுக்களே வாசித்துத் தள்ளப்பட்டன. துள்ளிசைக்குத் தவில்வாசித்த வித்துவான்களும் களைத்துப்போனார்கள். இயக்கப்பாட்டுக்கள் அனைத்தும் வாசித்துத்தீர்ந்துவிட்ட ஒரு நிலையில் ஈசானமூலையில் வைத்துத்தான் கர்நாடக சங்கீத இராகம் ஒன்றை வித்துவான்கள் வாசித்தார்கள்.

இது காலம் தந்த கோலம் என்றும் கொள்ளலாம்.

**கோயில் மரியாதை**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் போன்ற சமயப் பெரியார்கள் அன்றைய நாள்களில் திருக்கோயில் நிகழ்ச்சிகளுக்கு வருகை தருகையில் அத்தகையவர்களை மேளதாளம், சங்கு, சேமக்கலம், கொடி, குடை, ஆலவட்டமுடன் கூடிய கோயில் மரியாதை அளித்து அழைத்து வருவதே மரபும் பண்பாடாகவும் விளங்கியமை இன்று வரலாற்றுப் பதிவாகப் போய் விட்டது.

**பொற்காலம்**

குடாநாட்டுத் திருக்கோயில்களில் ஒலிபெருக்கிப் பாவனை அறவே இல்லாத பொற்காலம் ஒன்றிருந்தது. சுமார் 25 அல்லது 30 பொதுமக்களுடன் நடைபெறும் உபயங்களுக்குக்கூட இன்று ஒலிபெருக்கி சேவை அவசியமெனக் கருதப்படும் நிலையே காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள்,இருதய நோயாளர்கள், வயோதிபர்கள், கைக்குழந்தைகளே அதிக தாக்கத்திற்குள்ளாகிறார்கள். மறைமுகமாக டெங்கு, பாதீனியம் போன்றவற்றின் தாக்கத்தை ஒத்த ஒருவித பாதிப்பைக் கோயில் பலவற்றின் ஒலிபெருக்கிகள் உண்டுபண்ணுவதை எவரும் உணர்ந்து கொள்ளாமல் இருப்பது கவலைக்குரியதாகும். ஒலிபெருக்கியும் இன்று ஒரு தொற்று நோய் போலாகிவிட்டது.

பண்டைக் காலத்தில் ஊரில் ஏதாவது பிரச்சினைகள் எனில் கிராமத்துப் பெரியவர்கள் கோயில்களிலேயே ஒன்று கூடி அப்பிரச்சினைகள் பற்றி விவாதித்து, ஆராய்ந்து அவற்றைத் தீர்த்து வைத்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



செல்லப்பா நடராசா
மூத்த பத்திரிகையாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14.04.2010

# புதுவருட சிறப்பு மலர்




## அருகி வரும்...

( 9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பாரம்பரிய கலைகள்

பாரம்பரிய கலைகளைப் பேணிய பெருமையும் அன்றைய திருக்கோயில்களுக்கே உரியதாகும். கரக ஆட்டம்,பொய்க்கால் குதிரையாட்டம்,சிலம்படி ஆட்டம், தீப்பந்தம் சுழற்றுதல் போன்ற நிகழ்வுகளும் கோயிற்திருவிழாக்களில் நடைபெறுவதுண்டு. அதிகாலை வேளைகளில் சுவாமி வெளிவீதி உலா வருகையில் ஐந்துகண்; மூன்றுகண் தீவட்டிகளே வெளிச்சத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. மிகச் சிக்கனமாகச், சிறப்பாகக் கோயில்கள் பேணப்பட்டமையும் இன்று வரலாறாகி விட்டது. இன்றைய திருக்கோயில்களில் பணத்திற்கே முதலிடம் என்ற நிலை இருக்கையில் அன்று பக்திக்கே முதல் நிலை இருந்தது.

### ஒன்றாய் கூடி நின்றாய் இரண்டு கன்னை

வருடம் முழுவதும் அவ்வப்போது ஏதோ ஒரு சிறப்பு நிகழ்வு திருக்கோயில்களில் இடம் பெற்ற காலமாக அந்தக் காலம் விளங்கியுள்ளது. சித்திரைப் புத்தாண்டுக் காலங்களில் திருக்கோயில்களில் நடைபெறும் போர்த் தேங்காய் அடித்தல் நிகழ்வு முக்கியமானதாகும். இந் நிகழ்வுகளின் போது ஊரே ஒன்றுகூடி நிற்கும். ஆனால் நிகழ்வு நடைபெறும் வேளைகளில் மட்டும் ஊர் இரண்டு கன்னையாகப் பிரிந்து நின்று நிழ்ச்சிகளைப் பார்த்து ஆர்ப்பரித்துக் குதூகலிக்கும். போட்டி விதிகள் மீறப்படுமிடத்து கன்னைகள் இரண்டும் வாக்குவாதப்படுவதுமுண்டு.

சித்திரா பௌர்ணமி நாள்களில் திருக்கோயில்களில் சித்திரைக் கஞ்சி வார்க்கப்படும். இன்றும் நினைவு கூரத்தக்கதோர் சிறப்பு நிகழ்வாகும் இது. இந்நிகழ்ச்சியிலும் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை ஊர் மக்கள் அனைவரும் ஒன்று பட்டுக் கலந்து கொள்வதுண்டு.

### வருடாந்தப் பொங்கல்கள்

சிறிய திருக்கோயில்களில் வைகாசி, ஆனி மாதங்களில் நடைபெறும் வருடாந்தப் பொங்கல்கள் பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்ட காலமாகவும் அந்தக் காலத்தைக் கொள்ளலாம். இப்பொங்கல்களின் போது ஊரே களைகட்டி நிற்கும். ஒவ்வொரு பொங்கல்காரரும் முறுக்குவடை, பால் றொட்டி ஆதியாம் பலகாரங்களைக் கடகக் கணக்கில் சுட்டுப் படைப்பர். இவற்றுடன் பலாப் பழங்களுடன் கதலி, இதரை, கப்பல் வாழைப் பழங்களையும் குலை குலையாகப் படைத்து இன்புறுவார்கள். மடை வைக்கப்படும்போது யாருடைய மடை இவ்வருடம் சிறந்த பெரிய மடையென்று கணிப்பீடும் பொங்காரர்களால் மேற்கொள்ளப்படும்.

இந்த வருடம் இன்ன கோயிலில் இன்னவரது மடைதானாம் ஆகப் பெரியது என ஊரில் கதை பரவுகையில் அந்த மடைக்குரியவர் ஒருவித பெருமையில் மிதந்து களிப்புறுவதைக் காணமுடியும். ஒவ்வொரு கோயில்பற்றுக்கும் உரிய குடும்பங்கள் அனைத்துமே இப்பொங்கல்களில் பங்கு பற்றுவதுண்டு. இவ்விழாக்களின் போது இரவிரவாக முரசு வாத்தியம் முழங்கும். அதிகாலையில் பொங்கி பலபலவென்று விடியவே மடைபரப்பி தீபாராதனைகள் நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பொங்கலிட்டவர்கள் பொங்கலிடாத அடுத்த கோவிற்பற்றைச் சேர்ந்தவர்களுடன் தாம் பொங்கிப் படைத்தவற்றை பகிர்ந்துண்டு மகிழ்வார்கள். ஒரு வெள்ளி ஒரு கோயிலில் இப்பொங்கல் என்றால், இன்னொரு வெள்ளி அடுத்த கோயிலில் இப்பொங்கல் வைபவம் நிகழும்.

இப்படியே ஊர் முழுவதும் அந்தக் காலத்தில் பொங்கல்கள் நடைபெறுவது வழக்கமாக இருந்தது. அன்றுபோல் பொங்கல் வைக்கும் வழமை இன்று வெகுவாகக் குறைந்து விட்டமையையே காணமுடிகிறது.

குடாநாட்டு மக்களைப் பெரிதும் பரவசப்படுத்திய பல பழைமைகளை இன்று நாம் மறந்த நிலையில் இருக்கின்றோம். எது எப்படி இருப்பினும் வருடாந்த மகோற்சவ காலங்களில் இந் நாள்களில் குடாநாட்டுத் திருக்கோயில்கள் அனைத்திலும் நடைபெறும் அன்னதான நிகழ்வுகளை எவரும் பாராட்டி இன்புறாமல் இருக்க முடியாது.


எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




புதுவருட சுபநேரத்தில் மக்கள் வங்கியுடன்
கொடுக்கல் வாங்கல் செய்து பெறுமதியான
புதுவருடப் பரிசுகளை பெறுங்கள்



இம்முறையும் சுபநேர பாரம்பரிய சிநேகத்துடன் மக்கள் வங்கியில்
கொடுக்கல் வாங்கல் செய்து நீங்கள் பெறுவன,

ரூபா 25,000 பெறுமதியான சேமிப்பு சான்றிதழுக்கு பெறுமதியான பரிமாறும் தட்டொன்று பரிசு



அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் பரிசு

ரூபா 15,000 பெறுமதியான சேமிப்புச் சான்றிதழுக்கு பெறுமதியான பீங்கானொன்று பரிசு

சகல வைப்புக்களுக்கும் பொருத்தமான பரிசுகள்
யாழ்.பிரதேசத்தில் உள்ள மக்கள் வங்கியின் அனைத்துக் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களும் 2010 ஏப்ரல் 14 ஆம் திகதி காலை 9 மணிமுதல் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்திருக்கும்.

2006 2007 2008 2010 | 2008 2010 | 2009 | 2009

எமது சுபநேர கொடுக்கல் வாங்கல் பரிசை
எடுத்துச் செல்ல வாருங்கள்

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமக



# யாழ்ப்பாணம் வண். வடமேற்கு
# கேசாவில் ஸ்ரீ முத்து விநாயகர் தேவஸ்தானம்



## புதிய சித்திர சிற்பத்தேர்த் திருவிழா சிறப்புமலர் = 14.04.2010

நிகழும் மங்கலகரமான விகிர்தி வருடம் சித்திரை முதலாம் நாள் (14.04.2010) புதன்கிழமை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகிய சிற்பத் தேரில் அல்லல் நீக்கி பக்த கோடிகளுக்கு நல்லருள் புரிய பஞ்சமுகத் தோற்றத்தில் முத்து விநாயகர் பவனி வரவுள்ளார் என்பதை எம் பெருமான் அடியார்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.


### ஆலய பிரதம குருவின் ஆசியுரை

"அவனருளாலே அவன் தாழ் வணங்கி" என்ற திருவாசகத்திற்கமைய கேசாவில் ஸ்ரீமுத்து விநாயகன் தீய வினைகளை அழிக்கும் பொருட்டு புதிய சித்திரச் சிற்பத் தேரில் விகிர்தி வருடப்பிறப்பன்று நல்வினை ஓங்க வீதி வலம் வரும் காட்சியைக் கண்ணாரக் கண்டு தேரின் வடம் பிடித்திழுத்து எம்பெருமானது பரிபூரண திருவருளும் எனது திருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து"

ஆலய பிரதம குரு
வேத சிவாகம பூபதி
சிவஸ்ரீ இ.ரமணிதரக் குருக்கள்





### ஆலய தர்ம கர்த்தா சபையினரின் வாழ்த்துரை

இற்றைக்கு 200 வருடங்களுக்கு மேலாக பழமை வாய்ந்த வண்ணை கேசாவில் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயமானது ஆண்டாண்டு காலமாக விஸ்வப் பிரம்மகுல மக்களால் வழிபாடு செய்யப்பட்டுவந்தது. சிறப்பாக கீதாஞ்சலி V.K.நல்லையா அவர்களின் அரும்பணியால், ஆலயமானது 1967 இல் புதுப்பொலிவு பெற்று முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவரின் வழியினை பின்பற்றி கிராம மக்கள் ஆலயத்தை மேலும் மெருகூட்டி வருகின்றனர். அந்தவகையில் 2007 வரை அலங்கார உற்சவமாக நடைபெற்ற திருவிழா 2008 ஆம் ஆண்டு முதல் மகோற்சவமாக நடைபெற விநாயகப் பெருமான் அருள்பாலித்தார். விநாயகப் பெருமானின் இரதோற்சவமானது புது வருடப் பிறப்பு தினத்தில் நிகழ்வது ஒரு சிறப்பம்சமாகும். அந்த வகையில் 2010 ஆம் ஆண்டு முதன்முறையாக எமது ஆலயத்திற்கென அழகிய சித்திர சிற்பத்தேர் வடிவமைக்கப்பட்டு இன்று இரதோற்சவம் நிகழ்வதற்கு கைகூடியுள்ளது. இந்நாளில் விநாயகனின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்வோமாக.

## தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:


**காளிகா சிற்பாலயம்**
பூம்பொழில்
K.K.S. Road, அரசடிச் சந்தி.

**துளசிகா ஸ்ரோர்ஸ்**
K.K.S .Road,
அரசடிச் சந்தி.

**ஐங்கரன் துவிச்சக்கரவண்டி திருத்தகம்**
K.K.S .Road, அரசடிச் சந்தி.

"மாணவர்களின் உளமறிந்த"
**வீனஸ் கல்லூரி**
தரம் 4முதல் O/L வரையான வகுப்புக்கள். மாதாந்த பரீட்சைகளுடன் சிறப்பாக நடைபெறுகின்றது.
சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்

**B.K.Multi Shop**
மின்சார உபகரணங்கள், T.V. அன்ரனாக்கள், P.V.C. பைப், கல்வனைஸ் பைப் வகைகள் விற்பனையாளர்கள்.
K.K.S. Road, அரசடிச் சந்தி.

**நுபானா நகை அகம்**
தங்கப்பவுண் நகைவியாபாரம்
இல. 83, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான வாகனங்களுக்குரிய காபரேட்டர்களும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
**காபரேட்டர் ஆனந்தன்**
130, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

**குமரன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்**
இல. 966, K.K.S. Road,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

**லிங்கம் ஸ்ரோர்ஸ்**
603, K.K.S. Road,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**கிருபா வேக்ஸ் சொப்**
சகலவிதமான அலுமினிய பிற்றிங் வேலைகளும் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
துரைராசா வீதி, வண்ணார்பண்ணை.

**ஆனந்தன் மரக்காலை**
சகலவிதமான மரங்களும் குறித்த தவணையில் அரிந்து கொடுக்கப்படும்.
108, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.

**ஞானம் புத்தகசாலை**
எம்மிடம் பாடசாலைப் புத்தகங்கள், அன்பளிப்புப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள் மற்றும் பெண்களுக்குரிய Hand Bag வகைகள் School Bag வகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
இல. 635, K.K.S. Road, யாழ்ப்பாணம்.





**செல்வா காட்வெயார்ஸ்& செல்வா என்டபிறைஸ், செல்வா மோட்டார்ஸ்**
கம்பி ஆணிவகைகள், பிணைச்சல்வகைகள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் என்பவற்றை சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
120, ஸ்ரான்லி [illegible]

**மோகன் எஞ்சினியரிங் வேக்ஸ்**
கிறேசர் டீசல் எஞ்சின் திருத்துனர்
இல. 160, K.K.S. Road,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14.04.2010
புதுவருடச் சிறப்பு மலர்

## புத்தாண்டே வருக!

'புத்தாண்டே வா' என்று அழைப்பதாலா
புதியதினம் பிறக்கிறது? காலம் என்னும்
புத்தகத்தின் பக்கமதோ வினாடி தோறும்
புரண்டபடி இருக்கிறது! இனிமே லேநாம்
புத்தாண்டில் புதுக் கவிதை எழுதவேண்டும்
புதுச் சலங்கை ஒலியைக் கேட்போம்!
உத்தரவை நமக்கே நாம் இட்டுக் கொண்டால்
உருவாகும் நாளனைத்தும் புத்தாண்டாகும்!

செ.பரமநாதன், மண்டைதீவு.

அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
கொழும்பு விலையில் தரமான
மின் புாவனைப் பொருள்கள், மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
NEW TONE ELECTRICAL
440,442, Hospital Road, Jaffna. Phone. 021 222 2037

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
உங்கள் இடங்களை உங்கள் எண்ணம் போல் வண்ணமயமாக்குவதற்கு பூசுங்கள்
Multilac Paints
Multilac www.multilac.com
பிரதேச வாரியாக உள்ள எமது Colour Bank களில் பெற்றுக்கொள்ளலாம்.
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
கந்தவேலன் ரேடர்ஸ்
இல.110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2822

வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்
Manufacturers of Gold Jewels
கிருஷ்ணா நகை மாளிகை
Krishna Jewellary
கிளை நிறுவனம்:
கிருஷ்ணா அடகு கடை,
370, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 5046

ESWARRAN
Traders & Transport Service
GENUINE TRANSPORT SERVICE
அனைவருக்கும் எம் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
ஏ-9 பாதையூடாக
போக்குவரத்துச் சேவை
* முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை.
* எவருமே எதிர்பார்த்திராத மிகக் குறைந்த கட்டணங்கள்.
* அரச, தனியார் நிறுவனங்களின் நம்பிக்கையை வென்ற ஒரே நிறுவனம்
* எமது நிறுவனத்திற்கு முகவர்கள் எவரும் இல்லை.
* பொருள்கள் ஒப்படைத்து 24 மணித்தியாலங்களில் கிடைக்கும்
* இரு தசாப்த காலமாக மிகச்சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்கும் நிறுவனம்
கொழும்புக் காரியாலயத்தில் 24 மணிநேரமும் பொருள்கள் பொறுப்பேற்கப்படும்
இன்றே நாடுங்கள்; உங்கள் சேவையை உறுதிப்படுத்துங்கள்
ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
201 B, டாம் வீதி, கொழும்பு - 12.
T.P.: 0112433889, 0112435247, 0777674119
ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2813, 021 222 4317

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14.04.2010

# புதுவருட சிறப்பு மலர்

Happy New Year

## புத்தாண்டை நம்பிக்கையுடன் எதிர்கொள்வோம்



பழைமையான கழிதலும், புதியன புகுதலும் என்பதற்கிணங்க வருடம் ஒன்று கழிந்து புதிய வருடம் உதயமாகின்றது. ஒவ்வொரு மனிதனும் நல்ல சிந்தனைகளையும், நல்ல செயல்களையும் மனதில்கொள்ளவும், செயற்படுத்தவும் இவ்வாறான புதிய ஆரம்பங்கள் மிகவும் அவசியமாகிறது. மக்கள் அனைவரும் புதிதாய்ப் பிறக்கும் விகிர்தி வருஷத்திலே நல்ல முறையில் தங்கள் வாழ்க்கையை அமைத்து வளம் சேர்க்க வேண்டும். செல்வமும், சிறப்பும், ஆரோக்கியமும் பெருகவேண்டும். தீய எண்ணங்கள் யாவும் மனதை விட்டு விலகி நல்ல சிந்தனைகள் ஓங்க வேண்டும். இறையருள் எல்லா மானிடர்க்கும் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து பிறக்கும் புதிய வருடத்தை நம்பிக்கையுடன் எதிர் கொள்வோம் என்று வாழ்த்தி வணங்குவோமாக.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து.

பா. மனோகரக்குருக்கள்,
தலைவர், சர்வதேச இந்து குருமார் ஒன்றியம்

## இறை அருளோடும் பெரியவர்களின் ஆசியோடும் புத்தாண்டை வரவேற்போம்

இனிய அன்புள்ளங்களே, இறையருளோடும், பெரியவர்களின் ஆசியோடும் புத்தாண்டை வரவேற்போம். ஆலயங்களையும், எம்மை ஆளாக்கிய பெற்றோரையும் இந்நாளில் நன்றியோடு வணங்குவோம். உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வாழ்த்துக்கூறி அன்பின் வலிமையைப் பெருக்குவோம். எம் திருநாட்டின் எதிர்காலம் குறித்து அறிவு பூர்வமாகச் சிந்தித்துப் புதிய காரியம் ஆற்ற எண்ணுவோம். எம்மை நாம் எடை போட்டு, விடை பெறும் ஆண்டில் நாம் விட்ட தவறுகளை புதிய ஆண்டில் தொடராது விலத்த வழி தேடுவோம். நாம் செய்த தவறுகளுக்காக இறைவனை மன்றாடுவோம். எமக்குத் தீமை செய்தவர்களையும் நல் மனதோடு மன்னித்து அரவணைப்போம். வாழ்நாளின் பெறுமதியை உணர்ந்து வாழும் நாளைப் பெறுமதியாக்குவோம். எங்கள் உளநலத்தையும் உடல் நலத்தையும் பேணத் திட்டமிடுவோம். அல்லலுறும் மக்களுக்கு உதவ முன்வருவோம். எம்மைச் சூழவுள்ள அறியாமை என்னும் இருளை அகற்ற உழைப்போம். ஒவ்வொருவரும் தத்தம் சொந்த உழைப்பில் வாழ்வதற்கு ஆற்றுப்படுத்துவோம். விகிர்தி வருடம் வெற்றி தரும் வருடமாக அமைய வேண்டி அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைச் சமர்ப்பித்து அமைகிறேன்.



ஆறு.திருமுருகன்
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

## விதிமாற்று விகிர்தி ஆண்டே!

*சித்திரைப் புத்தாண்டே சீரோங்க வா!*
*பத்தரைப் பொன்நிகர் நற்சிந்தை தா!*
*இத்தரைமீதிலே மனிதம் மாண்புற வா!*
*வித்தகம்சேர் கல்வியொடு நிறைவளம் தா!*

*கதியற்று பதியற்று மகிழ்வற்று நொந்து*
*நிதியிழந்து நிலமிழந்து நிம்மதி இழந்து*
*மதிகலங்கி மனம் வெதும்பி வாடும் மாந்தர்*
*விதிமாற வழிகாட்டு விகிர்தி புத்தாண்டே!*

எஸ். யோகதாஸ்
கொழும்புத்துறை

## நிம்மதி தரட்டும் புத்தாண்டு

வசந்தமே வீசும் என்று
வாழ்க்கையில் கனவு கண்டோம்
கசந்துமே போனது வாழ்வு
காணுமா நிம்மதி இன்று
அசாத்தியத் துணிவினோடு
ஆரம்பமாகும் வாழ்வு
நிசமாய் புத்தாண்டு வந்து
நிம்மதி தரட்டும் வாழ்வில்

வ. யோகானந்தசிவம்

## பூரணத்துவ சுதந்திரம் நிலவுக

இன்று உதயமாகும் 'விகிர்தி'யாகிய புதுவருடத்தில் தமிழ் மக்கள் மத்தியில் அகதிவாழ்வு, அச்ச உணர்வுகள் நீங்கி ஒற்றுமை, சாந்தி, சமாதானம் நிலவிடவும் பூரணத்துவ சுதந்திரத்தை அனுபவிக்கவும் நமது மத,கலை, கலாச்சார, விழுமியங்கள் மேலோங்கி அனைவரும் புதுவாழ்வு வாழ பார்வதி பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**சிவஸ்ரீ.சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்,**
*தலைவர், வலி/கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம்,*
*கோப்பாய்.*

## மங்களகரமான ஆண்டாக அமையட்டும்!

இன்று சித்திரைப் புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இந்த இனிய தமிழ்ப்புத்தாண்டுக்கு விகிர்தி வருஷம் என்று பெயர். இற்றை நாள் வரை பட்ட துன்பதுயரங்கள், இன்னல் இடுக்கண்கள், அவதி அவலங்கள் அனைத்தும் நீங்கி இன்று முதலாக ஈழம் வாழ் மக்கள் எல்லோரும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல நல்லைக் கந்தனை வணங்கிச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்கின்றோம்.



கிழக்கு வானிலே உதயசூரியன் உதித்து இனி எல்லோரும் நலமே வாழ வேண்டும் என்ற நம்பிக்கைக் கீற்றுக்களைப் பரப்பிக் கதிர் விட்டுப் பிரகாசித்து ஒளி வீசுகின்றான்.

இன்று முதல் இனியாவது எல்லோரும் இனிய, சந்தோஷமான, மகிழ்ச்சி நிறைந்த, மங்களகரமான நல்வாழ்வு வாழவேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாதக்கமலம் பணிந்து வாழ்த்தி வணங்கி தொல்லை தீர்க்கும் நல்லைக் கந்தனையும் பணிந்து போற்றி அருளாசிகளை வழங்கி உளமாரப் பிரார்த்திக்கிறோம்.

இன்று பிறந்துள்ள இந்த விகிர்தி ஆண்டு அமைதியும், ஆனந்தமும், இனிமையும், இன்பமும், சமாதானமும் நிறைந்த இனிய ஆண்டாக மலர்ந்து அனைவருக்கும் ஆறுதலையும் தேறுதலையும் வழங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை
திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## பூதலத்தில் மேலோங்க பிறக்கிறது 'விகிர்தி'!

சித்திரைப் புத்தாண்டு சிரிக்குது வந்தின்று
நித்திரையை விட்டெழுந்து நின்றோம் - எத்தனையோ
நித்திரைசெய் நேரத்தில் நிகழ்ந்துதான் போயிற்று
அத்தனையும் மீட்டிடல் மாண்பு!

பொருள் வளமிழந்து பொன்னான வாழ்விழந்து
இருள் கவிந்திடும் இருப்பால் - வருகின்ற
புத்தாண்டை இல்லத்தில் புத்தாடை அணிந்துமே
எத்திக்கும் கொண்டாடல் ஏது?

சொந்தங்கள் இல்லாமல் சுற்றிவர இருக்கின்ற
பந்தங்கள் அனைத்தும் பரிதவிக்கும் - அந்தநாள்
நினைவூடே மீதமுள நாமெதனைக் கொண்டாடல்
மனைகளில் தீபங்கள் மாள?

ஆண்டாண்டு காலங்கள் அழுது புரண்டாலும்
மாண்டோர் திரும்புதல் முடியாது - காண்டாவனம்
நீங்கி இளவேனில் நீராடிப் புத்தாண்டை
பாங்காகக் கண்டிட முனை?

விரோதி கழிந்து 'விகிர்தி' பிறக்கிறது
விரோத வாழ்வியல் விலகிடும் - அரோகண
ஆதவன் உதயத்தில் அனைவரின் வாழ்வுமாம்
பூதலத்து மேலோங்கப் பார்!

மூல். பாரதி

## புதுமைகள் காண்போம்! புதியன படைப்போம்!

இந்தப் புத்தாண்டு நன்நாளில் புதுமை காண்போம், புதியவை படைப்போம், புதிய வரலாற்றை உருவாக்குவோம், தமிழர் வரலாற்றில் கறை படிந்த விரோதி ஆண்டு விடைபெற்று இன்று விகிர்தி ஆண்டு பிறக்கின்றது.

இன்றைய தமிழ்ப் புத்தாண்டு நன்நாளில் பல வருடங்களுக்குப் பிறகு எமது தேவஸ்தான பிரம்மோற்சவம் கொடியேற்றம் ஆரம்பமாவது ஒரு சிறப்பு அம்சமாகும். எனவே எம் மக்களுக்கு எல்லாம் வல்ல அம்பிகையின் அருட்கடாட்சம் கிட்ட பிரார்த்திப்பதோடு என் அன்பிற்கினிய மக்கள் அனைவருக்கும் எனது உள்ளார்ந்த தமிழ்ப் புத்தாண்டு நல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் உரித்தாக்குகின்றேன்.



சர்வே ஜனகா சுகினோ பவந்து
சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர், J.P
*(சிவச்சார்ய பீடாதிபதி, அகில உலக சைவகுருமார் சம்மேளனம், பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)*

## வடக்கு மாகாண ஆளுநரின் புத்தாண்டுச் செய்தி- 2010

விரோதி ஆண்டின் விரோதங்கள் நீங்கி மலரும் விகிர்தி ஆண்டில் வெற்றிகள் மிளிர நம்பிக்கையும் வெளிச்சமும் ஊட்டும் வளமுள்ள புத்தாண்டாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன். அநேக வருடங்களுக்குப் பின்னர் அமைதி மிகு சூழலில் வடக்கு மாகாண மக்கள் புத்தாண்டைக் கொண்டாடுவதையிட்டு நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைய வேண்டும். கடந்த ஆண்டுகளை விட இவ் ஆண்டில் அநேகமாக எல்லா ஆலயங்களிலும் மக்கள் தமது அன்றாட வழிபாடுகளை செலுத்துவதனையும் பண்டைய கால பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் கொண்டாட்டங்களில் மன மகிழ்ச்சியுடன் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக உள்ளது. அனைத்து மக்களும் தம் முன்னுள்ள சகல சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்தி வளமுடன் வாழ வேண்டும் என இப்புத்தாண்டில் வாழ்த்துகின்றேன்.



ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி,
வடக்கு மாகாணம்.

## சித்திரை நங்காய்! வருக

சித்திரை நங்காய்!
சத்தங்கள் ஓய்வில்
சரித்திரம் படைப்பாயா?
சீரழிந்து நிற்போர்க்கு
சிரிப்பினைத் தருவாயா?
அரசரோடு ஆண்டியரும்
ஊரூராய் இடம் பெயர்ந்தோருமே
இன்றைய நாளினில்
தம் கவலைகளை மறந்து,
உன்னைப் போற்றிப் பாடிட
புன்னகைத்து வருகின்றாய்
உன் பிள்ளைகள் எல்லோருக்கும்
உயர்வினைத் தந்திடம்மா
சித்திரை நங்காய்! வருக
உன் பிள்ளைகள் எல்லோருக்கும்
உன்னதங்கள் சேர்ப்பா யெனநம்பி
உன் தாள்கள் பணிகின்றோம்.

க.காமலாம்பிகை,
மீசாலை.

## உன்வரவு நல்வரவாய் விளங்கட்டும்!

சகலருமே சகவாழ்வுச் சமுதாயச் சூழலிலே
மகிழ்வுடனே வாழ்கின்ற நிலையது நிலவிடஉன்
வகிபாகம் தகுந்ததுவாம் வழியதனை வழங்கிடவே
''விகிர்தி''யே உன்வரவு நல்வரவாய் விளங்கட்டும்!

ப.மகேந்திரதாசன்,
நாயன்மார்க்கட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவலைகளும், அழைப்பும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 28 | | 24 |
| ★ | | ★ |
| 05 | | 04 |
| ★ | | ★ |
| 1977 | | 2009 |



### நாகராசா மதனராசா

திதி: அமாவாசை

அன்புத் தெய்வமே! உமையிழந்துநாம் கண்ணீரில் நனைகின்றோம்
பிள்ளைகள் அப்பா எங்கே எனஅழைக்கும் வேளை
நான் பதில் சொல்ல முடியாதுஅழுகின்றேன்.
ஆண்டுகள் பல சென்றாலும் தெய்வமே உன் நினைவில் நாம் வாழ்வோம்.

ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

என்றும் உம் நினைவில்:
மனைவி: தர்சினி, பிள்ளைகள்: பவித்தன், சுகிர்தன், அக்ஷயா மற்றும் தந்தை, சகோதரர்கள், மாமன், மாமி, மைத்துனிகள்.

வளர்மதி சாலை,
கைதடி மத்தி.

## ஓராம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 24 | | 27 |
| ★ | | ★ |
| 03 | | 04 |
| ★ | | ★ |
| 1955 | | 2009 |



### அமரர் சுப்பிரமணியம் அழகரத்தினம்

கூலியழைத்து நீங்கள் குலாவிய சந்தை
நெற்றி வியர்வை தன்னை பட்டுமேனியிலேந்திய காணி
அயலவரும் அன்னிய உறவுகளும் அழகு எங்கே என்று அதட்டுகின்றனர்
அன்புள்ள மனையாள் அழுதவிழிகளோடு
அப்பா.... என்றழைக்க யார் உள்ளார் உங்கள் அன்புச் செல்வங்களுக்கு...
ஓராண்டு சென்றும் ஓயாத உங்கள் நினைவுகளால்
ஓவென்றழுவது கேட்கலையோ? அப்பா.... அலையாது உங்கள் ஆத்மா
யாருமறியாத உண்மைகள் உங்கள் சாவில்
உறவுகள் அறியும் போது உண்மையைப் புரிவார்கள்.

நாளை மறுதினம் (16.04.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஓராண்டு நினைவு தின நிகழ்வை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(96938)

நிரந்தர முகவரி: பேராலை,பளை.
தற்காலிக முகவரி: விக்னேஸ்வரா வீதி, ஐங்கரன் ரியூசன் அருகில்,நெல்லியடி.

தகவல்:
திருமதி சி.அழகரத்தினம் (அம்மாச்சி) பிள்ளைகள்.


# யாழ் நகரில்

## British College of Higher Studies

ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளுக்கு 100% வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும்/உறுதிப்படுத்தும் முகமாக அவர்களின் ஆளுமையை விருத்திசெய்யும் **(Personality Development)** பயிற்சிப் பட்டறைகள் **(Work shops)**

### இப் பயிற்சி நெறியில் உள்ளடங்குபவை

- நேர்முகத்தேர்வினை எவ்வாறு எதிர் கொள்வது?
- அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?
- எப்படியான ஆயத்தங்களிற்கமைய உங்களைத் தயார்படுத்துவது?
- உங்களிடம் உள்ள ஆவணங்களை எவ்வாறு முறைமைப்படுத்துவது?
- அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலமும், அதற்கான உரையாடற் பயிற்சிகளும்
- முகாமைத்துவம் (Management)
- மனிதவளப் பயன்பாடுகள் ( Human Resource Management)
- அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள் (Ms.Windows, Ms Word, Excel, Power Point, Accounting)

பயிற்சியின் முடிவில் தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

**பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்**
சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்களின் பதிவுகளை தாமதமின்றி முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் நேரஅட்டவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவருக்கும் எமது நிறுவனத்தினால் சுயவிபரக்கோவை (Bio-Data) தயாரிக்கப்பட்டுத் தொழில் வங்கியிலும் (Jop Bank) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**British College of Higher Studies**
No. 15, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna.
web: www.bchs.lk Email:info@bchs.lk Tel: 021-2224550, Mobile:0777222422, 0714299935, 0773501459


## மணிவிழா

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வி.மாணிக்கம் அவர்களின் மணி விழா நிகழ்வு 2010.04.22 அன்று நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மணிவிழா மலர் வெளியீடும் பணிநயப்பு நிகழ்வும் இடம்பெற இருப்பதனால் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், பாடசாலை சமூகத்தவர்கள் அனைவரும் மணிவிழாக் குழுத்தலைவர் செ.உதயகுமார் (பிரதி அதிபர்) அவர்களுடன் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: 0778696944, 0212223456
Email:jcmmvnavothya@gmail.com

## தவறிவிட்டது

10.04.2010 அன்று யாழ்.நவீனசந்தை கட்டட உட்புறத்தில் நிறுத்தப்பட்ட லேடிஸ் சைக்கிள் (லுமாலா) கைமாறி எடுத்துச்செல்லப்பட்டுவிட்டது. உரியவர்கள் நேரில் வந்து சைக்கிளை ஒப்படைத்து தமது சைக்கிளைப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: ம.சாந்தி,
இல,82,காரைக்காட்டுலேன்,
யாழ்ப்பாணம்.

(96941)


# CANADA.
## STUDY / WORK VISA

- Male/Female 18-35 Years
- No IELTS

With payed **WORK PLACEMENT** After 3 years get PR

Hurry!! Few Seats June, July Left. *Condition Apply

- Canadian Government Approved.
- Financial Sponsorship Available.
- Expert Visa Consultation (Foreigner) Guidance.
- Study / Visiting Visa for Schengen Countries.

**ROAM EDUCATION SERVICES**
11B 2/2, Beach Road, Mount Lavinia.
Phone : 272 5449 , 0777 48 36 63 - Ranjith
077 80 80 962 - Mr.Peter
E-mail : info@roameducation.com


## பிரதேச செயலகங்களில் மக்கள் முண்டியடிப்பு

யாழ்ப்பாணம். ஏப் 14

இந்த ஆண்டுக்கான வாகன அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதில் மக்கள் அதிக அக்கறை காட்டுவதாகத் தெரிய வருகிறது.

குடாநாட்டின் முக்கிய இடங்களில் போக்குவரத்துப் பொலிஸார் நிலை கொண்டிருப்பதுடன், வாகன பரிசோதனைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாகவே வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களுக்குரிய அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்காக பிரதேச செயலகங்களில் அதிகளவில் கூடுவதாகத் தெரிகின்றது.

(க-224)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்.ஏப்.14

கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா புத்தாண்டு தினமான இன்று நடைபெறவுள்ளது. இதனையொட்டி இன்று மாலை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் மதுரகவி, காரை.எம்.பி.அருளானந்தன் 'மஹோற்சவத்தில் ரதோற்சவம்' என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். இந்த ஆலயத்தின் மஹோற்சவம் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

(க-14)


THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

மாணவர்களினதும், பெற்றோர்களினதும் நம்பிக்கை நிறுவனத்தில்


# O/L
## DAY CLASS

ஏப்ரல் 14 இல் ஆரம்பம்.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன.

*The Express Institute*
Irupalai, Kopay.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்

B.A (Hons) PGDE
M.A. சைவசித்தாந்தம்
ஆசிரியர், நாவற்குழி ம.வி.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றுக் கொண்டதனை மனதாரப் பாராட்டி மேலும் பதவிகள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
க.ம. இராஜேந்திரம் குடும்பம் (J.P)
புகையிரத நிலைய வீதி,கோண்டாவில்.

(சி/566543)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 08.04.2010 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் போது யாழ். மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட மக்கள் தலைவர் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் அவரோடு வெற்றிபெற்ற திரு.சில்வெஸ்திரி அலன்டின் யூட் (தோழர் உதயன்) திரு.முருகேசு சந்திரகுமார் (தோழர் அசோக் ) ஆகியோரையும் ஏனைய ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களின் மக்கள் பணி தொடரவும் வாழ்த்துகிறோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களின் வெற்றிக்காகப் பாடுபட்ட ப.தெ.வ.அ.கூ. நிறுவனங்களின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கும் ஏனையவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களின் வெற்றி எங்களின் வெற்றியாகும்"

**அங்கத்தவர்கள்,பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும்.**

(சி/566545)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை மெதடிஸ்த திருச்சபை தமிழ், சிங்கள மக்கள் கலந்து கொள்ளும் மாபெரும் தேசிய ஜெப மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தி வருகிறது. அதன் ஓர் அங்கமாக யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை திறந்த வெளிக் கூட்டம் இடம்பெற்றது. இந்த நிழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் புத்தூர் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த கிரிஸ்ரிகுமார், இந்திய மெதடிஸ்த திருச்சபை பிரதிநிதி வின்சன் சாமுவேல், மெதடிஸ்த திருச்சபையின் வடக்குக்கிழக்கு மறை மாவட்டத் தலைவர் எஸ்.டி.தயாசீலன் ஆகியோர் நற்கருணை உரை நிகழ்த்துவதனை முதல் மூன்று படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ், சிங்கள மக்கள் நற்கருணை பாடல்களைப் பக்தி பூர்வமாகப் பாடுவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.
(படம்: ரட்ணம், உமா)

# தமிழ் மக்களின் ஒற்றுமையைக் கருத்திற் கொண்டு அனைத்து தமிழ்க் கட்சியினரும் ஒன்றிணைவோம்

## அழைக்கின்றார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்



திருகோணமலை,ஏப்.14

தமிழ் மக்களின் ஒற்றுமையைக் கருத்திற் கொண்டு வடக்கு- கிழக்கில் உள்ள அனைத்து தமிழ்க்கட்சிகளும் ஓரணியில் செயற்பட அழைக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன்.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் திருகோணமலையில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தப்பகிரங்க வேண்டுகோளை விடுத்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகளுடன் தேர்தலுக்கு முன்னர் பேச்சு நடத்தி எம்முடன் இணையுமாறு வேண்டு கோள் விடுத்தோம். ஆயினும் எமது முயற்சிகள் அனைத்துமே தோல்வி கண்டன. எமக்கு எதிராகப் பல்வேறு அரசியற் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தேர்தல் களத்தில் குதித்திருந்தன. எனினும் எம்மால் வெற்றி பெற முடிந்தது.

எனவே தமிழ் மக்களின் ஒற்றுமையின் பேரால் நாங்கள் அவர்களுடன் சேர்ந்து செயற்படத் தயங்கமாட்டோம். அந்த வகையில் அவர்களும் சிந்திக்க வேண்டும் என்று மிக விநயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

### குண்டர்களின் அட்டகாசத்தால் வாக்களிக்க முடியாத நிலை

தமிழ் பேசும் மக்களின் நலன்கருதி இது அத்தியாவசியமான தேவை என்பதை வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். தேர்தல் முடிவுகளின்படி தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளாக எம்மைத் தெரிவு செய்திருக்கிறார்கள். நாம் எல்லோரும் தமிழ் பேசும் மக்களின் நன்மை கருதி ஒன்றாகச் செயற்படுவோம்.

தமிழ்க் கிராமங்களில் குண்டர்களின் அட்டகாசத்தால் தமிழ் மக்கள் சுயாதீனமாக வாக்களிக்க முடியாத நிலை தோன்றியது. சலப்பையாறு, கும்புறுப்பட்டி, குச்சவெளி, தம்பலகாமம், சாம்பல்தீவு, ஆத்திமோட்டை ஆகிய பகுதிகளிலேயே இச்சம்பவங்கள் அதிகரித்திருந்தன.

கும்புறுப்பட்டி வாக்களிப்பு நிலையத்தில் மீள வாக்களிப்பை நடத்த தேர்தல் திணைக்களம் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

கும்புறுப்பிட்டி மட்டுமல்ல வேறுபல இடங்களில் இவ்விதமான முறைகேடுகள் இடம்பெற்றன. குறித்த கிராமத்தில் வாக்குகள் மூலம் பெரிய மாற்றம் எதுவும் நிகழப்போவதில்லை. சுமார் ஆயிரம் வாக்குகளே அங்குள்ளன. இருப்பினும் இதனை நடத்துவதனூடாக முறைகேடு ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது-என்றார்.

அதேவேளை, முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து எதிர்கால அரசியல் நகர்வுகள் இடம்பெறுமா என்று கேட்ட போது;

அக்கட்சிகளின் தலைமைகளுடன் விரைவில் கலந்து பேசி இது தொடர்பாக முடிவெடுக்கப்படும். பெரும்பாலும் அரசியல் தொடர்பான நடவடிக்கைகளுக்கான ஓர் கூட்டணியை ஏற்படுத்தும் எண்ணம் இருக்கிறது. இதுபற்றி விரைவில் அவர்களுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும் என்றார். (ஒ)

## வருடாந்த ஒன்றுகூடலும் சுவிஷேச ஆராதனைகளும்

வண்ணை. ஏப். 14

இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் வருடாந்த ஒன்று கூடலும் சுவிசேஷ ஆராதனைகளும் இன்று புதன்கிழமை தொடக்கம் 18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெறவுள்ளது.

யாழ். கண்டி வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள மேற்படி சபையில் தினமும் மாலை 5.30 மணிக்கு ஆராதனைகள் ஆரம்பமாகி நடைபெறும்.

வியாழன் முதல் ஞாயிறுவரை காலை 7 மணிக்கு வேதபாடம், காலை 9 மணிக்கு ஆராதனை, பிற்பகல் 2.30 மணிக்குப் பரிசுத்தாவியின் கூட்டம் நடைபெறும். (ஒ-160)

## துர்க்கை அம்மன் ஆலயத்தில் இன்று புத்தாண்டுப் பூசை

யாழ்ப்பாணம், ஏப். 14

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் புத்தாண்டை ஒட்டி இன்று காலை 6.57 மணிக்கு விசேட பூசைகள் இடம்பெறவுள்ளன. அதிகாலை கலச அபிஷேகத்துடன் புத்தாண்டுப் பூசைகள் ஆரம்பமாகி 7.30 மணிக்கு அம்பாள் வீதியுலாவந்து துர்க்கா புஷ்கரணியில் சங்கராந்தித் தீர்த்தம் இடம்பெறும். (1)

## ஆசிரியருக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 14

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் ஆசிரியர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆசிரியர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஒ-10)

# பிரபாவின் முக்கிய ஆவணங்கள் அம்பலவன்பொக்கணையில் மீட்பு

## தேடுதல் தொடர்கிறது என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஏப்.14

முல்லைத்தீவு மாவட்டம், அம்பலவன் பொக்கணையில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் முக்கிய ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது முக்கிய ஆவணங்கள் மற்றும் போட்டோ அல்பம், நான்கு வீடியோ கஸட்டுகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன. பிரபாகரனின் செயற்பாடுகளை அறியக் கூடிய வகையில் அந்த ஆவணங்கள் அமைந்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் பதுக்கி வைத்திருந்த ஆயுதங்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து படையினர் தேடுதல் நடவடிக்கைகளை நடத்தி வருகின்றனர்- என்றார் பிரசாத் சமரசிங்க. (ஒ-1)

# இலங்கையர் 133 பேரை ஆஸிக்கு கடத்திய நபர் சிக்கினார்

## 20 வருட சிறைவாசம் கிடைக்குமாம்

கொழும்பு. ஏப். 14

இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு ஆள்களைக் கடத்தும் பணியில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவருக்கு எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் 133 இலங்கையரை இவர் அவுஸ்திரேலியாவுக்குக் கடத்தியதாக வந்திருக்கலாம் என்று விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக அவுஸ்திரேலியாவின் உள் துறை அமைச்சர் பிரிண்டன் ஓகோணர் தெரிவித்தார்.

எனினும் 54 பேரைக் கடத்தி வந்ததாக இவர் மீது தற்போது குற்றஞ் சுமத்தப்பட்டு நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் அமைச்சர் கூறினார்.

குறிப்பிட்ட நபர் 20 வருட சிறைவாசத்துடன் 2லட்சத்து20ஆயிரம் டொலர் அபராதமும் செலுத்த வேண்டிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

# சென்னை சென்ற சிவாஜிலிங்கம் நேற்றுத் திருப்பி அனுப்பப்பட்டார்

## விமான நிலையத்தில் தடுக்கப்பட்டு விசாரணை

கொழும்பு. ஏப். 14

தமிழகத்துக்குத் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சென்னை விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டார்.

நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் கொழும்பில்இருந்து விமானம் மூலம் சென்னை சென்ற சிவாஜிலிங்கம், விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்தபின் தமிழகத்துக்குள் நுழைய அனுமதிக்காது மீண்டும் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

தனிப்பட்ட் விஜயமாகத் தமது உறவினர்களைச் சந்திப்பதற்காகவே சிவாஜிலிங்கம் தமிழகம் சென்றார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சிவாஜிலிங்கம் சென்னையில் நடந்த உலகத் தமிழர் பண்பாட்டு மாநாட்டுக்குச் சென்ற போது, விமானநிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டதும் தெரிந்ததே. (ஒ-1)


## தவறிவிட்டது

இணுவில் மேற்கு, இணுவிலைச் சேர்ந்த சுகந்தி பொன்னம்பலம் என்பவருடைய தே.அ. அட்டை (845903255V), பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன கைப்பையுடன் 769 மார்க்கஇலக்க தனியார் பஸ்ஸில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

ராணி மாளிகை, கே.கே.எஸ். வீதி, இணுவில் மேற்கு, இணுவில்.
தொ.பே. 0718562075, 0715979976
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


# "மக்னெற்றிக்" உதைபந்தாட்டம்; புதிய அறிமுகம்

பூகோளமயமாக்கல் நிகழ்சித்திட்டத்தின் கீழ் நவீன மயப்படுத்தப்பட்ட விளையாட்டாக ''மக்னெற்றிக் உதைபந்தாட்டம்'' இன்று புதன்கிழமை இரவு வதிரி டயமன்ட் விளையாட்டு மைதானத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

வீரர்களின் தனித்திறமைகளையும், குழுத்திறமைகளையும் குறுகிய நேரத்தில் வெளிக்காட்டக்கூடிய வகையில் இந்தப் புதிய உதைபந்தாட்ட முறையைப் பயிற்றுவிப்பாளரும் நடுவருமான மகாதேவன் மதிஅழகன் அறிமுகம் செய்து வைக்கவுள்ளார். இந்த உதைபந்தாட்ட முறையை மிக விரைவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஊடாக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்துக்குச் சமர்ப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-10)

# திக்கம் வடிசாலையின் பணியாளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் டக்ளஸ் பேச்சு

யாழ்ப்பாணம். ஏப்ரல். 14

சுமுகமான முறையில் திக்கம் வடிசாலையை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை தெரிவித்தார்.

திக்கம் வடிசாலை கடந்த சில காலமாக இயங்க முடியாது இருக்கின்ற நிலை யில் இதன் காரண மாக நேற்று முன்தினம் அமைச்சரின் யாழ்.பணிமனையில் திக்கம் வடிசாலையின் பணியாளர்களையும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போது சுமுகமான முறையில் வடிசாலையை இயங்க வைக்க வேண்டும் என்பதுடன், அதன் மூலம் சகல தொழிலாளர்களும் பலன் அடைய வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே தமது நோக்கம் என்று தெரிவித்த அமைச்சர், வடிசாலையை மீண்டும் விரைவில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார். (ஒ)


## BITSMANS கல்வி நிறுவனம், மானிப்பாய்

A/L 2012

★ கலை ★ வர்த்தகம்
★ கணிதம் ★ உயிரியல்

| | |
|---|---|
| ★ தமிழ் - N.பாலா | ★ இரசாயனம் - N.மகேஸ்வரன் |
| ★ வரலாறு - M.பத்மன் | ★ பௌதிகம் - பார்த்தீபன் |
| ★ புவியியல் - N.பாபு | ★ இணை.கணிதம் - பிரதீபன் |
| ★ இந்து நாகரிகம் - S.ஜெயக்குமார் | ★ உயிரியல் - பொன்.திவாகரன் |
| ★ கிறிஸ்தவம் - வசந்தன், நூட் | ★ பொருளியல் - P.சன் |
| ★ நாட.அரங்கு - மங்களேஸ் | ★ கணக்கீடு - N.ராஜன் |
| ★ அரசியல் - ஜெனா | ★ வணிகக்கல்வி - சூபன் |
| ★ அளவையியல் - R.P.சர்மா | |

ஆரம்பம்: 17.04.2010 சனி 2PM
(இ/566556)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடம் சௌபாக்கியமும் சமாதானமும் நிறைந்த ஆண்டாக அமைய வேண்டும்

## யாழ்.படைகளின் தளபதி வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் ஏப். 14

பிறந்திருக்கும் தமிழ்-சிங்களப் புத்தாண்டானது நம் அனைவருக்கும் சௌபாக்கியமும் சமாதானமும் நிறைந்த ஆண்டாக அமைய வேண்டும் என்று யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்க தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தளபதியின் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ், சிங்கள இனங்களான நம் அனைவரினதும் கலாசார நிகழ்வான இந்தப் புத்தாண்டைக் கொண்டாடும் சந்தர்ப்பத்தில் ஒரே இனமாக எழுச்சி பெறுவதற்கு திடசங்கற்பம் கொள்வோம். பல வருடங்களாக நடைபெற்ற யுத்தத்துக்குள் உள்வாங்கப்பட்டு தற்போது சமாதானமான, சுதந்திரமான வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கும் யாழ்.குடாநாட்டு மக்கள் கடந்த வருடங்களைவிட இந்த வருடம் சமாதானத்துடன் புத்தாண்டைக் கொண்டாடக் கிடைத்துள்ளது.

இந்தச் சூழலை ஏற்படுத்துவதற்குப் பாதுகாப்பு படையினராகிய நாம் பெரும் தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்துள்ளோம்.

ஏ-9 வீதியைத் திறந்து வடக்கையும் தெற்கையும் இணைத்ததன் மூலம் சிநேகபூர்வமான வாழ்வை எல்லா மக்களும் பகிரமுடிகின்றது.

அதன் மூலம் அனைவரும் சிறந்த பொருளாதார அபிவிருத்தியையும் பெற முடியும் என நான் நம்புகின்றேன்.

அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், தனியார் துறையினர் அனைவருக்கும் இந்த வேளையில் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

எமது நாட்டில் வாழும் எல்லா இன மக்களும் பாதுகாப்புடன் வாழச் சந்தர்ப்பம் அமைத்துக் கொடுத்த பாதுகாப்புப் படையினர்கள் எப்போதும் உங்களுடன் செயற்படுவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் இன, மத பேதமின்றி நாம் அனைவரும் ஒரு தாய் மக்களாக இணைந்து செயற்படுவோம். அதற்காக இந்தப் புத்தாண்டு நன்நாளில் பிரார்த்திப்போம்-என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-10)

## சிங்களக் கற்கை நெறிக்குத் தோற்றியவர்களுக்கு இன்னும் சான்றிதழ் வழங்கப்படவில்லையாம்

நல்லூர், ஏப். 14

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் 2008 ஆம் அண்டு ஆவணி மாதம் 'டிப்ளோமா இன் சிங்களம்' 6 மாதப் படிப்பில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இது வரை வழங்கப்படவில்லை என இதில் கலந்து கொண்ட மாணவர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இதற்கென ஒவ்வொரு மாணவரிடமும் ரூபா 9 ஆயிரம் கட்டணமாக அறவிடப்பட்டதாவும் நான்கு ஆசிரியர்கள் இதற்கென நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறப்பட்ட போதும் ஒரேயொரு ஆசிரியர் மட்டுமே இந்தப் பாடத்திற்கென வருகை தந்ததாகவும் தெரிவித்த மாணவர்கள் முதலில் 'டிப்ளோமா இன் சிங்களம்' எனக் கூறப்பட்ட இந்தக் கற்கை பின்னர் சான்றிதழ்களுக்கான கற்கை நெறியென மாற்றப்பட்டதாகவும் எனினும் இதுவரை இதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கூறுகிறார்கள். (1-111)

## பன்னிரு திருமுறை முற்றோதல் நேற்றுடன் பூர்த்தியாகியது

யாழ்ப்பாணம், ஏப். 14

அகில இலங்கை திருமுறைமன்றத்தினர் விரோதி வருடம் முழுவதும் ஈழத்திருநாட்டு மக்கள் நன்மையைக் கருதி மாதம் ஒரு கோயில், மாதமும் ஒரு திருமுறை முற்றோதல் என பன்னிரண்டு மாதமும் பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி நிறைவு செய்துள்ளனர்.

நிறைவு விழாவாக கரைநகர் மருதடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் ஆலயப் பொறுப்புரிமை சபையினரின் ஆதரவுடன் நேற்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆலயப் பூசையைத் தொடர்ந்து நாயன்மார் நால்வருக்கும் அபிஷேகம், பூசை, வழிபாடுகள் நடைபெற்று மாலை 3.30 மணிக்கு பன்னிரண்டாந் திருமுறையில் வெள்ளானைச் சுருக்கம் படிப்பு நடைபெற்று முற்றோதல் பூர்த்தியானது.

அதனைத் தொடர்ந்து முற்றோதலில் பங்கு பற்றியோரை கௌரவித்தல், தேவாரப்பண்ணிசை, சொற்பொழிவு, மழை வேண்டல் பதிக நூல் வெளியீடு, மழை வேண்டல் பதிகப் பாடுபயணம் ஆகியன இனிதே நிறைவு பெற்று நாயன்மார் நால்வர் வீதியுலாவாக காரைநகர் திண்ணபுரம் ஈழத்து சிதம்பர சிவகாமி உடனுறை நடராஜப் பெருமான் திருக்கோயிலுக்கு எழுந்தருளி விசேட பூசை நடைபெற்றது.

இன்று புதன்கிழமை மாலைப் பூசையுடன் முதலாந்திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தொடர்ந்து 14.05.2010 வரை தினமும் மாலைப் பூசையைத் தொடர்ந்து முற்றோதல் நடைபெறும் என இப் பெருமன்ற அமைப்பாளர் சி.கிருஸ்ணமூர்த்தி தெரிவித்தார்.

### மக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களே புதுவருடத்தின் உண்மையான தாற்பரியத்தைப் பெரிதும் உணர்ந்து கொள்ள வேண்டியவர்களாவர்.

ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பாதுகாக்கப்பட்டு வரும் சிறந்த விழுமியங்கள் மற்றும் பாரம்பரியங்களை அவர்களுக்குப் போதிக்க வேண்டியது ஒரு தேசம் என்ற வகையில் எமது பொறுப்பாகும். அத்துடன் எமது நாட்டை வளப்படுத்தியுள்ள கலாசார மரபுரிமைகளையும் அவர்களிடம் கையளிக்க வேண்டும்.

ஒவ்வொரு குடியிருப்பும் புதுவருட பாரம்பரியங்களை எதிர்காலத்தின் சுபமான ஆரம்பத்துக்கான நம்பிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

எமது நாட்டின் ஒற்றுமையையும் பெருமையையும் பிரதிபலிக்கும் இந்த சிங்கள - தமிழ் புதுவருடம் மகிழ்ச்சி, சமாதானம், பகிர்ந்துகொள்ளல் மற்றும் திருப்தியுறுதல் போன்ற உணர்வுடன் அனைவராலும் கொண்டாடப்பட்டு எம்மை எதிர்கால சுபீட்சத்துக்கு இட்டுச் செல்லும் என நம்புகிறேன். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

### கே.பியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை ஒன்றினை விடுத்திருத் தினர்.

அதாவது ராஜீவ் காந்தி கொலை வழங்கில் முக்கிய சாட்சியாக பத்மநாதன் இருப்பதால் அவரை விசாரிப்பதற்கு இந்தியா அனுமதி கோரியிருந்தது. ஆனால் இலங்கை, இந்திய அதிகாரிகளின் கோரிக்கைக்கு சாதகமாகப் பதில் அளிக்கவில்லை என இந்திய மத்திய புலனாய்வு அமைப்பு தெரிவித்தது.

தற்போது இந்தியா மீண்டும் பத்மநாதனை விசாரிக்க கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.அத்துடன் அவரது வங்கிக் கணக்குகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.

## கூட்டுறவு ஆணையாளருக்கு முறையீடு

சுழிபுரம், ஏப். 14

கூட்டுறவுச் சங்கங்களின் பல சிக்கனக் கடன் வழங்கும் சங்கங்கள் பலவும் மூன்று ஆண்டுக் கணக்குகள் கூட்டுறவுத் திணைக்கள கூட்டுறவுப் பரிசோதகர்கள் பரிசோதனை செய்யாததால் சங்கப் பொதுக் கூட்டத்தை நடத்த முடிவு செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி கூட்டுறவு ஆணையாளருக்கு முறையிடப்பட்டுள்ளன.

பண்ணாகம் மக்கள் சிக்கனக் கடன் வழங்கும் சங்கம் திறம்படச் செயற்பட்டு அங்கத்தவர்களுக்குக் கடன் வசதி, மரண சகாய வசதிகளைச் செய்து வருகின்றது.

இதன் மூன்று ஆண்டுக்கான கணக்காய்வைச் செய்து பொதுக் கூட்டத்தை நடத்த உதவுமாறு நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர். (ஒ-28)

### அதிகாரப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயக தேசிய முன்னணி (சரத் பொன்சேகா தலைமையிலான கூட்டணி) மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய சிங்களத் தேசியவாதக் கட்சிகள் இரண்டும் தேர்தலில் குறிப்பிடத்தக்க அளவில் தோல்வி அடைந்துள்ளன.

இது பெரிதும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய, கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். கடும் போக்காளர்களின் தோல்வி இலங்கையில் ஒரு புதிய அரசியல் சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு உதவும் என எதிர்பார்க்கலாம்.

இந்த இரண்டு கட்சிகளும் அந்த நாட்டின் தமிழ், முஸ்லிம் மக்களுடன் எந்த வகையிலும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்று அடம்பிடித்து வந்தவை.

அரசாங்கத்தரப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறக்கூடிய சாத்தியங்கள் அதிகளவில் உண்டு. அத்தகைய நிலை ஏற்படும்போது அர சாங்கம் அரசமைப் புச் சட்டத்தைத் திருத்தக்கூடிய வாய்ப்பும் கிடைக்கும். இது மிகவும் முக்கிய வாய்ப்பாக அமையும். ஆகவே, அதனை இலங்கை அரசாங்கம் தக்கவாறு பயன்படுத்த வேண்டும் என்று நாம் கருதுகின்றோம் - என்றார் றொபேர்ட் ஓ பிளேக்.(அ)

### யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடுபுடைவைகள் உட்படப்பல்வேறு பொருள்களை அவர்கள் வாங்குவதைக் காணக்கூடியதாக இருந்தது.

யாழ். நகர் வர்த்தக நிறுவனங்கள் நேற்று இரவு வரை வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன.

பஸ் சேவைகளும் சகல பகுதிகளுக்கும் இரவுவரை இடம்பெற்றன. (ஒ-1)


மதுரம் இன்ஸ்ரிரியூட்
டச்சுவீதி, இருபாலை, கோப்பாய்.
O/L DAY CLASS
ஆரம்பம்-15.04.2010 வியாழன் முற்பகல் 10மணி.

Physics 2012 Batch
English and Tamil Medium
Personal and Group Classes
BY: S.Uiroviyam
தொடர்புக்கு: 0777158667,0212222452


## மரண அறிவித்தல்



### திருமதி தவமணிதேவி முத்துரத்தினம்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி முத்துரத்தினம் நேற்று (13.04.2010) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையாவின் சகோதரியும் காலஞ்சென்ற சிற்றம்பலம் முத்துரத்தினத்தின் அன்பு மனைவியும் பத்மாதேவி,கமலாதேவி, றோகினிதேவி,மாலினிதேவி, தவரத்தினம் (முன்னாள் கிறீன்லேஸ் வங்கி அலுவலர்) ஆகியோரின் அன்புத்தாயாரும் அ.ஜெயராஜசிங்கம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), Dr.வே.கனகரத்தினம் (பொறுப்பதிகாரி, பிரதேச வைத்தியசாலை, கோண்டாவில்), த.தர்மஜெயசூரியர் (ஓய்வுபெற்ற அலுவலகர், இலங்கை வங்கி), உமா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சரபிந் (பொறியலாளர்-அவுஸ்திரேலியா), ஜெனினி, உசேந்தன் (பொறியியலாளர்-லண்டன்), பானுமதி, ஜெயந்தன் (பொறியியலாளர்-அவுஸ்திரேலியா), சியாமளபாலினி, தயாபரன் (பொறியியலாளர்-அமெரிக்கா), சுதாயினி வேல்தாஸ் (பொறியலாளர், கனடா), அனோஜா (கனடா), Dr.விமலராஜன், Dr.நிரோஜா (வைத்திய அதிகாரி, யாழ்ப்பாணம்), சஜீவ் (ஒமேகா சிவில் என்ஜினியர் கொன்ஸ்ரக்சன், யாழ்ப்பாணம்), றோகன்ராஜ், தேனுகன், ஆகியோரின் பேர்த்தியும் சியாம், சரன், விகேஷ், பிரம்மியா, சோபிதா, தனிஷா, லவனியா, லசாலி, லக்ஷிகா, மகிரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.04.2010) வியாழக் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் கிழக்கு, இளங்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

ஞானவைரவர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். தொ.பே: 021 222 9094

தகவல்:
குடும்பத்தினர்.


யாழ். நகரின் No 1 கல்வி நிறுவனம்
22ஆவது வருட கல்விச் சேவையில்...
O/L DAY CLASS
ஆரம்பம்: 16.04.2010
வெள்ளி காலை 8.30 மணி
* எமது Supper Grade ஆசிரியர் குழு.
* புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

A/L 2012
கலை, வர்த்தகம்
ஆரம்பம்
17.04.2010 சனி
ஆரம்பம்
16.04.2010
வெள்ளி 9am
O/L DAY CLASS
தரம் 6,7,8,9,10,11,
புதிய அனுமதிகள்
யூனிவேர்சல்
யா/இந்து மகளிர் கல்லூரி அருகே.


## அனைவருக்கும் நன்றிகள்



தமிழினத்தின் தன்மானம் காக்க துணிச்சலுடன் வாக்களித்து யாழ்ப்பாணத்தில் அதிகமான நாடாளுமன்ற அங்கத்தவர்களை இலங்கைத் தமிழரசுக்கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) பெற உதவிய அனைவருக்கும் எனது மனம்கனிந்த நன்றிகள்.

என்னை அங்கீகரித்து எனக்குத் தங்களின் விருப்புவாக்குளை அளித்த அன்பு நெஞ்சங்களுக்கும், பல வழிகளிலும் எனக்கு ஆதரவு வழங்கிய அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்.

இன்று பிறக்கும் விகிர்தி புதுவருடத்தில் தமிழ் மக்கள் அச்சுறுத்தல்கள் அற்ற, துன்ப துயரங்கள் அற்ற நிம்மதியான சுதந்திரமான வாழ்க்கைவாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என வேண்டி, எல்லோரும் சகல நலமும் பெற்றுவாழ வாழ்த்துகின்றேன்.

என்றும் உங்கள் சேவையிலுள்ள
ஆ.ந. இராசேந்திரன்,
வேட்பாளர், இலங்கைத் தமிழரசுக் கட்சி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14.04.2010
புதுவருட சிறப்பு மலர்

# 'புலரும் புத்தாண்டே' பூதலமெங்கும் நிம்மதியைத் தந்திடுவாய்!

இயற்கையெழில் கொஞ்சும் அழகான உலகைப்படைத்த தெய்வத்தின் மேலான செயலை உணர்ந்த ஆதித்தமிழன் இயற்கையைப் பணிந்தான். இயற்கையும் அவர்களின் வாழ்வை உயர்த்தியது. எண்ணிலடங்கா ஜீவராசிகள் உண்டு, உறங்கி உயிர் வாழ்வதற்கு வாழ்வாதாரமாக விளங்கும் காட்டை மாந்தர் "கானகம்" எனப் பெருமைப்படுத்தினர். வனப்பு நிறை வனத்தை, அதன் வளத்தை அழிக்காது பாதுகாத்தனர். வானமும் பொய்யாது ஒழுகியது. மாந்தர் வாழ்வும் பெருகியது. வளமும் பெருகியது. இயற்கையை இரசித்து இயற்கையை ஆராதித்து பெரும் பேறு பெற்றனர். சுடர்க் கடவுளைப் போற்றினர். பஞ்ச பூதங்களை பணிந்தனர். திசைத் தெய்வங்களுக்கு தேவ நாமகரணம் சூட்டித் தொழுதனர். மேலான மொழி பேசி, மேன்மையுடைய தூய நெறிபற்றி, கடவுளைக் கைதொழுது; குலவொழுக்கம் பேணி, பண்பு வளர்த்துச் சிறப்புற வாழ்ந்த நம் முன்னவர் தீயவற்றை விலக்கி, தூய்மை காத்து, மாற்றானையும் நேசித்து, வைதாரையும் கூட மன்னித்து, அன்பு, பரிவு, பாசம் எனும் நன்நெறி நின்று, இனியவை பேசி, என்றும் இன்முகம் காட்டி, விருந்தோம்பி, பெற்றவர்களைப் போற்றி, பெரியவர்களைப் பணிந்து வாழ பண்டிகைத் திருநாள்களை வகுத்து வாழ்வாங்கு வாழ்ந்தனர்.

இறைவணக்கமும் சமய நூல்களும், புராணக் கதைகளும், தேவார திருவாசகமும் நல்வழிப்படுத்தும் சாதனங்களாக விளங்கின. பண்டிகைத் திருநாள்கள் பரந்துபட்ட உறவை வளர்த்தன. தமிழ் இந்துப் பெருமக்களால் கொண்டாடப்படும் பண்டிகைத் திருநாள்களில் சித்திரை வருடப்பிறப்பும் ஒன்று.

இவ் வருடப்பிறப்பின் வரலாற்றை நோக்குமிடத்து விரதாபம் கொண்ட நாரத முனிவருக்கு 60 குழந்தைகள் பிறந்தனவென்றும், அந்த 60 பிள்ளைகளுக்கும் 'பிரப' முதல் 'அட்சய' வரையும் நாமகரணம் சூட்டினர் என்றும் அந்த அறுபது பெயர்களையும் கொண்ட வருடங்களை ஆக்கி சித்திரைத் திங்கள் முதல்நாளை புதுவருடப்பிறப்பாக கொண்டாடப்படும் வழக்கம் ஏற்பட்டது என்பது அமிதான்சிந்தாமணி என்னும் நூல் தெரிவிக்கின்றது.

மேட ராசியில் இருந்து மீன ராசி ஈறாகவுள்ள பன்னிரு ராசிகளிலும் சூரியன் சஞ்சரிக்கும் காலங்களை சூரிய மாதங்களாகக் கணக்கிட்டு சித்திரை தொடக்கம் பங்குனி வரையும் உள்ள ஈராறு மாதங்களையும் ஓராண்டாகக் கொண்டு சௌரமானம் என்னும் முறையைப் பின்பற்றி தமிழ் இந்துப் பெருமக்களும், ஆரிய குலத்தவரும், பௌத்த சிங்களப் பெருமக்களும் சித்திரை மாத முதல் தினத்தை புது வருடம் பிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

புது வருடம் பிறக்கும் சுபநேரத்தில் தான் பிரமதேவனும் தனது படைப்புத் தொழிலை ஆரம்பித்தான் எனப் புராணம் சொல்கின்றது. மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலின் கோபுரத்துக்கு நேராகச் சூரியன் காட்சிதரும் பெரும் சிறப்பும் சித் திரைத் திங்கள் புது வருடத் தினத்தன்றே நிகழ்வதும் சிறப்பு அம்சமாகும்.

இன்று 'விகிர்தி' என்னும் புதுவருடம் பிறக்கின்றது. பூதலமெங்கும் புண்ணியம் வளரவும், தானிய தானங்கள் பெருகவும், மாந்தர் வாழ்வு சிறக்கவும் 'பிரப' முதல் 'அட்சய' ஈறாகவுள்ள அறுபது வருடங்களில் ஒன்றாக, இருபத்தி நான்காவது வருடமாக இன்று சுப வேளையில் பிறக்கும் புதுவருடத்தை இன்முகத்தோடு வரவேற்போம்.

இதயசுத்தியுடனும் இன் முகத்துடனும் இனிய புத்தாண்டை வரவேற்று தோஷங்கள் நீங்கும் பொருட்டு சிரசில் மருத்து நீர் தேய்த்து வைகறையில் நீராடுவர். பல மூலிகைகளையும், மலர்கள், கோரோசனை, கோமயம், கோசனம் என்பன சேர்த்து சுத்த நீரில் கசாயமாகக் காய்ச்சிக் கொள்வதனால் மருத்துநீர் ஔடதத்திற்கு ஒப்பானது. நோய்களையும் தீர்க்க வல்லது. அதனால் தீயவை விலகி வாழ்க்கை செழிக்கும் என்னும் அசையாத நம்பிக்கையோடு சீதப் புனலாடி சிந்தை தெளிந்து புத்தாடை புனைந்து, ஆபரணங்கள் சூடி, விபூதி தரித்து, திலகமிட்டு மன நிறைவோடு கண்ணாடி, தீபம், நிறைகுடம், புத்தகம், பூக்கள், கனிகள் என்னும் மங்கலப் பொருள்களைத் தரிசித்து பெரியாரை, பெற்றாரை வணங்கி குல தெய்வங்களைத் தொழுது வருடப் பிறப்பைக் கொண்டாடும் வழக்கம் இன்றும் உள்ளது.

சூரியன், சந்திரன், அக்கினி என்பன ஆதிசிவனின் முக்கண்களென்பர். முச்சுடர்களைப் போற்றும் மரபுக்கு இசைவாக கதிரவன் சிவனின் வலது விழியாக அமைந்திருப்பதனால் சூரியன் இந்துக்களின் வாழ்வில் முன்னிலை பெறுகின்றான். நவக்கோள்களுக்கு நாயகனாகவும், கால மாற்றங்களுக்கு கர்த்தாவாகவும் கதிரோன் விளங்குகிறான்.

சுடர்க் கடவுளான கதிரவனுக்கு இப்புனித நாளில் முற்றத்தில் பொங்கலிட்டு, படைத்து தீப, தூபம் காட்டி சர்க்கரைப் பொங்கலோடு இனிய பட்சணங்களையும் சேர்த்து குடும்பத்தவருடன் சேர்ந்து அயலவர், உறவினர் ஆகியோருடன் பகிர்ந்துண்டு புதுவருடப் பிறப்பை கொண்டாடி மகிழும் வழக்கமும் தமிழ் இந்துக்களிடையே உண்டு.

நன்கு அலங்கரிக்கப்பட்டு புது மெருகோடு புனிதமாய் விளங்கும் இந்து ஆலயங்களில் வருடம் பிறக்கும் சுப வேளையில் மணிகள் ஒலிக்க, சங்கொலிக்க, மங்கள வாத்தியம் முழங்க, விசேட பூசைகள் இடம் பெறும். மங்கலம் நிறை பூசைவழிபாடுகளில் கலந்து குலதெய்வங்களைத் தரிசித்து இடர்நீங்கி, இனிய பெற்று, இன்பமுடன் வாழவேண்டி இறைவனை வேண்டி நிற்பர். சுவாமியின் திருவீதியுலாவின் திவ்விய தரிசனம் நெஞ்சில் நிறைய மனப்பூரிப்போடு இல்லம் திரும்பி மகிழ்வெய்துவர்.

சுப நேரத்தில் கை விசேடம் பரிமாறலும், புதுக் கணக்கு ஆரம்பித்தலும், வியாபாரம் செய்தல், வித்தியாரம்பம் போன்ற நல்ல கருமங்கள் நடைபெறுதலும், புதிய தொழில்களை ஆரம்பித்தல் போன்ற நிகழ்வுகளும் இத் தினத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிகழ்வுகளாகும்.

இத் திருநாளில் புண்ணியம் நிறை பூமியில் தெய்வத்தை தொழுது தோன்றிய அமைதி தொடர்ந்து, எல்லோர் வாழ்விலும் விக்கினங்கள் இன்றி வாழப் பிரார்த்திப்போம். அன்பைத் துணைகொண்டு, ஆன்மீக வழி நின்று எல்லோரும் எல்லாமும் பெற்றுய்ய அலர் மலர் கொய்து இறை பணி செய்து மலரும் விகிர்தி நல்லாண்டில் வேண்டுதல் செய்வோம்.

கந்த.தியாகராசா,
கோண்டாவில்.



MD-90 HONDA, LANCER 50 HONDA, SAFARI 4S49CC,
KUBOTO 550 LAND MASTER வாகன BATTERY வகைகள் , வாகன ரயர், ரியூப்,
CEYPETCO OIL வகைகள் L.M.L. FREEDOM மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
LML ஸ்கூட்டர் உதிரிப்பாகம், மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
Happy New Year
S.P.N.MOTORS
145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

TCN EXPRESS INTERNATIONAL
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மலரும் இனிய
சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

232 நாடுகளுக்கான உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை
உள்நாடு வெளிநாடுகளுக்கு
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள்
உணவுப்பொருட்கள், உடுபுடவைகள்
மற்றும் DVD பிரதிகள் CD க்கள்
என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
TCNEx
நீங்கள் அனுப்பும் பொருட்களுக்கு காப்புறுதி உண்டு
லண்டன், சுவிஸ், பிரான்ஸ்,
நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத
பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும்
கனடாவிற்கான 3 கிலோவிற்கு
குறையாத 1Kg பொதிகளுக்கு
500/= ரூபா வரையான விசேட சலுகை

WESTERN UNION
வெளி நாடுகளிலிருந்து விரைவாக பணத்தைப் பெற்றுக்கொள்ள
MMBL Money Master

புதுமை விரும்பிகளின் நவீன தெரிவிற்கு
NOKIA
Connecting People
Authorized Distributors in Jaffna
நீங்கள் கொள்வனவு செய்யும்
Nokia Phone களுக்கு
1 வருட உத்தரவாதம்

D-Link
Building Networks for People
EPSON
EXCEED YOUR VISION
Debug

Sri Lanka Telecom
Mobitel
We Care. Always.
யாழ் மாவட்டத்தின் ஏக விநியோகத்தர்கள்

TCN EXPRESS
No.2B, Nelson Place,
Colombo-06

திருமுருகன் கொம் நெற்
259. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
பிரதான வீதி, நெல்லியடி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் 14.04.2010 புதுவருடச் சிறப்புமலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடச் சிறப்பு மலர்

உதயன் 14.04.2010

## புத்தாண்டே அலாவுதீனின் அற்புத விளக்கேந்தி வா

யாருடைய நிகழ்ச்சி நிரலோ
வரலாறு காணாத மனிதப் பேரவலம்
அரங்கேறி விட்டது
நீரைக் கிழிக்கும் விசைப் படகுகள்
நிலத்தைக் கிழிக்கும் உழவு இயந்திரங்கள்
தூரப் பயணத்தில் துணைநின்ற உந்துருளிகள்
ஏன் மிதி வண்டிகள் கூட
ஓடி மறைந்து போன ஊரிலே
ஆதி மனிதராய்க் காலடி எடுத்து வைக்கும் அவர்கள்;
கூரையில் நின்று கூவிடக் கோழியும் இல்லை
கூரையும் இல்லை; குடில் அமைக்க
காட்டுத் தடி வெட்டுகிறான்.
ஆட்டுக்குக் குழை வெட்டத் திரிந்தவன்
ஓர் ஆடே இல்லாத ஊரில்
உறவுகளை இழந்த ஏக்கத்தில்
நெஞ்சைப் பிழியும் சோகத்தைச் சுமந்து
நெஞ்சை நிமிர்த்த முடியாமல்
சேய் முகம் காணும் தாய் போல
வாஞ்சையோடு காலடி எடுத்து வைக்கும்
இம் மனித ஜீவன்களுக்காக
ஜீவகளை ஊட்டப் பூத்தாண்டே
அலாவுதீனின் அற்புத விளக்கை ஏந்தி வா

காயாம்பூ
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட சிறப்பு மலர்

உதயன் 14.04.2010


HAPPY NEW YEAR

GREAT NEWS TO ALL,
Who are interested in
Imagination & Creativity



I am COMING.....
First time in Srilanka
(In Jaffna)

The world is but
a canvas to the imagination!


We Help You to Imagine & Fuel Your Creative Appetite!

siat
ACADEMY
A unit of SIAT GROUP
BANGALORE - INDIA

புது வருடத்துடன் ஓர் புதிய வாய்ப்பு
இந்தியாவின் ' சிலிக்கன் சிற்றி ' பெங்களூர் மாநிலத்திலிருந்து
SIAT ACADEMY யாழ்நகர் வருகை.
கற்பனை வளம் ஆக்கத்திறன் ஆர்வலர்களா?
உங்களுக்கான கற்கைநெறி, பயிற்சி முறைமை, சிறப்புத் தேர்ச்சி, தொழில் வாய்ப்புக்கான அரிய வாய்ப்பு
ANIMATION FILM MAKING, STUDIO BASED ANIMATION TRAINING
WITH LIVE PROJECT

MAG NET
ACADEMY (PVT) LTD

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்




இலங்கையில் முதன் முறையாக யாழ் நகரில்
franchisee of



siat
ACADEMY
Lead, Create, Animate.

வயது ஓர் தடையல்ல
படைப்புத்திறன் ஆற்றலே அனிமேஸன் துறையில்
உங்கள் தகைமையைத் தீர்மானிக்கும்.
உயர்தர அனிமேஸன் பயிற்சி நெறிக்கு
யாழ்நகரில் உங்கள் வழிகாட்டி
MAG NET Academy (Pvt) Limited
விரைவில் உங்களுக்காக
SIAT ACADEMY உடன் இணைந்து MAG NET ACADEMY



நியூ அசோகா
அலுமினியப் பிற்றிங் சென்ரர்



63, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
Work Shop: மயிலணி வடக்கு, சுன்னாகம்.
தொலைபேசி இல:. 021 2240331, 0773609034.







வாடிக்கையாளர்களுக்கு எமது
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் !




உங்கள் சகல விதமான அலுமினியப் பிற்றிங்
அலுமினிய றோலர் சட்டர் மற்றும் சில்லறை
வேலைகளை உத்தரவாதத்துடன் செய்து
பெற்றிட எம்மை அணுகவும்.



குறிப்பு: அலு... [illegible] ...ந்தவர்கள் உடன் தேவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவருட சிறப்பு மலர்
உதயன்
14.04.2010



## கைவிசேட பாரம்பரியம்

தமிழர் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில்
"கைவிசேட கொடுக்கல் வாங்கல்"
முக்கியமான விடயமாகும்.

முன்னைய காலத்திலே, புத்தாண்டு பிறந்ததும்
கைவிசேடத்துக்கான சுப நேரம் வந்ததும்
வீட்டின் குடும்பத் தலைவன், தமிழ் மரபின்படி,
வெற்றிலையில் நாணயத்தை வைத்து
மனைவிக்கு கைவிசேடம் கொடுக்க,
மனைவி கணவனின் காலடியில் பணிந்து
வணங்கி கைவிசேடம் பெறுவார்.

இல்லத்தை வளமாக்கி, பிள்ளைகளை
வளர்த்தெடுக்கும் மனைவி
மேலும் வாழ்க்கையில் மேன்மைகள் பெற
கைவிசேடம் கொடுக்கிறார். தமிழ் மரபின்படி,
மனைவியும் கணவனின் மேன்மைக்காக
கணவனை வாழ்த்தி கைவிசேடம் கொடுப்பார்.

தந்தையும் தாயும் சேர்ந்து நிற்க,
இல்லத்தின் அனைவரும் ஒவ்வொருவராக
வணங்கிக் கைவிசேடம் பெறுவார்கள்.
புதுவருடமன்று குலதெய்வ வழிபாடு செய்து,
பெரியோர்களிடம் ஆசி பெறுவது
நன்மைதரும் என்பது ஐதீகம்.

இவை போன்ற புத்தாண்டுப்
பழக்கவழக்கங்களை சுப நேரத்தில்,
உரிய முறையில், தமிழர்கள் பின்பற்றிப்
பேணிப் பாதுகாத்து வருகிறார்கள்.

உதயமாகும் இப்புதுவருடம் சகல மக்களுக்கும்
சுபீட்சத்தையும், சகல நலன்களையும் நல்க
வேண்டுமென வாழ்த்துகிறோம்.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Happy New Year
புதுவருட சிறப்புமலர்
உதயன்
14.04.2010



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

சிறி சிவாஞ்சனா நகையகம்

இல. 149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 9227



Happy New Year

அனைவருக்கும் எம் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கொண்ட தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவுசெய்து நீங்கள் விரும்பும் தினத்தில் உங்களுக்கு தருபவர்கள்

நிஷானந்தா ஜுவல்லறி

இல.6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2227985

Happy New Year



தரமான நவீன கணனிகள், உதிரிப்பாகங்கள், மற்றும் மின்சார இலத்திரனியல் பொருள்களை கொள்வனவுசெய்திட

World's No 1

Abans

நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோகசேவையைப் பெற்றிட

Midea Electro Mart

Authorized Dealer for Abans Ltd.

e-mail: midea21@gmail.com

No: 1-1, 1-H, Stanley Road,
Jaffna, SriLanka.
T.P: 021 222 4566, Fax:021 222 1646.

Happy New Year





சகலவிதமான மின்சார இலத்திரனியல் உபகரணங்களை
அபான்ஸ் நிறுவனத்தின் உத்தரவாதத்துடனும்
இலவச விநியோக சேவையுடன்
பெற்றுக்கொள்ள

LG JAFFNA ELECTRICAL



No: 04, New Market, Chavakachchri. T.P: 0213008702 Authorized Dealer for Abans

141, Power House Road, Jaffna.
T.P: 021 222 4566, 5766.

Cool Line: 0777725258

94 (6), Stanley Road, Jaffna.
021 222 2353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 14.04.2010

# புதுவருட சிறப்பு மலர்

Happy New Year

## கபிலா

கொழும்பு விலையைவிட குறைவான விலையில்..

**கபிலா** காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கபிலா** பாதணியகம்
13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

Happy New Year



## ஜெகன் களஞ்சியம்

அனைவருக்கும் சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்
பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு நாடவேண்டிய ஒரே இடம்

**ஜெகன் களஞ்சியம்**
இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

## சிறீ மீனாட்சி தங்க மாளிகை

Happy New Year

அசல் தங்க நகைகளுக்கு நம்பிக்கையாக நாடுமிடம்



**சிறீ மீனாட்சி தங்க மாளிகை**
187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 6109

## ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எம்மினிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்

சகலவிதமான கேக், ஐஸ்கிறீம் குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருள்கள்
கைத்தொழில் மூலப்பொருள்கள்
வாசனைத் திரவியங்கள் மற்றும் ஆயுள்வேத மருந்துச் சரக்குகள்
ஆகிய அனைத்தையும் பெற்றிட

Happy New Year

**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்**
16A, கே.கே.எஸ்.வீதி, (சத்திரச்சந்தி), யாழ்ப்பாணம். தொ.பே: 2219

## ஈரிக்கணேஷ்

அனைவருக்கும் சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னரை விட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட - இளைய தலை முறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

**ஈரிக்கணேஷ்**
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486

கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

## செல்வி நகை அகம்

அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

Happy New Year

**செல்வி நகை அகம்**
(தாம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)

நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே 2229441



## வீடுகள் கட்டடங்கள் கட்ட விரும்புபவர்களுக்கு ஒரு வாய்ப்பு

உங்கள் வீடு கட்டும் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்று யோசிக்கின்றீர்களா? எங்களிடம் ஒப்படையுங்கள். உங்கள் கனவு வீட்டை நிஜவீடாக்கித் தருகின்றோம்.



- ✓ இலவச வீடமைப்பு ஆலோசனை
- ✓ இலவச வீட்டுப்படம் Plan வரைதல்
- ✓ வீடு கட்டியபின் வீட்டுத்தோட்டம் Land Scaping அமைத்தல் இலவசம்
- ✓ நவீன தொழில்நுட்ப Lastest Technology முறைகள் மூலம் குறைந்த செலவில் வீடுகள் அமைக்கமுடியும். இதனால் எல்லோரும் ஒரு வீட்டிற்கு உரிமையாளர் ஆகலாம்.
- ✓ 100 % நம்பிக்கை நாணயம்
- ✓ குறுகிய காலத்திற்குள் வீடு அமைக்கப்படும்
- ✓ சாத்திரமுறைப்படி வீடுகள் அமைக்கப்படும்
- ✓ நவீன வீடுகள் Modern Houses in Latest Fashion அமைத்தல்
- ✓ பழைய வீடுகள் முன்முகப்பு உட்பட புதிய பசன் Latest Fashion இற்கு மாற்றி அமைத்தல்
- ✓ நிதி நிலைக்கேற்றவாறு சிறிய வீடுகள் அமைத்தல்
- ✓ நிதிபற்றாக்குறை ஆயின் வங்கிக்கடன் உதவி ஒழுங்கு செய்து தரப்படும்.
- ✓ இலங்கையின் எப்பகுதியிலும் (நிலம் வாங்குதல் உட்பட) வீடுகள் அமைக்கப்படும்.

குறிப்பு: கட்டடக்கலை என்னவென்று தெரியாதவர்களிடம் வீடு கட்டும் பொறுப்பை கொடுத்து பணத்தை வீண் விரயமாக்காதீர்கள். நாங்கள் உங்கள் பணத்தை மீதமாக்கித் தருகின்றோம்.

தொடர்புகொள்ளுங்கள் எம்மிடம் வாருங்கள்
0786155929, 0774163146, 0213205939

(95444)

**Ananda Housing Constructions** Reg.No TN/VC/0011
பருத்தித்துறை வீதி, மடத்தடிச் சந்தி, சாவகச்சேரி.
மகாவித்தியாலயம் அருகில்.
E-mail: ananda.housing@yahoo.com

## அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

Happy New Year

**அஜந்தாஸ்** ரெக்ஸ்ரைல்ஸ்

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும் ஸ்தாபனம்



54, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
25,4 ஆம் குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

## எங்களின் வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு!

| | | |
|---|---|---|
| ★மென்பானம் தயாரிப்புப் பொருள்கள் | ★ஐஸ்கிறீம் தயாரிப்புப் பொருள்கள் | |
| ★கேக் தயாரிக்கும் பொருள்கள் | ★எமல்சன் வகைகள் | ★எசன்ஸ் வகைகள் |
| ★பொலித்தீன், லஞ்ச் பொக்ஸ் | ★பிஸ்கட் வகைகள் | ★ரொபி வகைகள் |
| ★இந்தியன் ஊதுபத்தி வகைகள் | ★ஆயுர்வேத மருந்துகள் | ★சொப்பிங் பாக் |
| ★ஆயுர் வேத மூலிகைகள் | ★றோயல் தயாரிப்புப் பொருள்கள் | |
| ★பாடசாலை உபகரணங்கள் | ★சொக்லட் வகைகள் | ★லைற் வகைகள் |
| ★ பான்சி குட்ஸ் வகைகள் | ★ பேப்பர் சேவியற் | |

★ஹொட்டல் மற்றும் சைனிஸ் ஹொட்டலிற்குரிய பொருள்கள்

மற்றும் பல்வேறு வகையான அனைத்துப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

புத்தாண்டு வாழ்த்துக்கள்

**[illegible] பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல.: 021 222 2567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 14.04.2010

# புதுவருட சிறப்பு மலர்




## பத்தின் வருகை பலம் தருவதாய் அமையட்டும்

ஆயிரம் கனவுகளுடனும்
ஆசைகளுடனும்
அலர்ந்திட்ட புத்தாண்டே!
எத்தனை எத்தனையோ
எதிர்பார்ப்புக்களுடன்
உன்னை நாம்
வரவேற்கின்றோம் தெரியுமா?
போன ஆண்டு உன்னிடம்
கற்ற பாடம் ஒன்றா! இரண்டா!
அத்தனையும் எம் இதயத்தில்
அழியாத நினைவுகளாய்....
யுத்தமென்னும் அரக்கன்
எம்மைத் துரத்தியதால்
எத்தனை எத்தனை
உறவுகள் மடிந்தனர்
உடைமைகள் அழிந்தன
அத்தனையும் தாங்கியபடி
அகதிச் சிலுவையோடு
இன்னும் எம் மக்கள்
காலத்தின் சதியால் நாம் பட்ட
காயங்கள் எமக்குப் போதும்
மீண்டும் வேண்டாம் உன் வரவு
இனி ஒரு விதி செய்யவும்
எம்மை நாம் ஆண்டிடவும்
பத்தின் வருகை பலமும் நலமும்
நல்குவதாய் அமையட்டும்.

செல்வநாயகம் ரவிசாந், குப்பிளான்.

## பூக்கும் சித்திரை

பூக்கும் சித்திரையே வருகவே
போலிகளை அகற்றுவோம் வருகவே
காக்கும் சித்திரையே வருகவே
கண்ணீரை அகற்றுவோம் வருகவே

ஏழையின் சித்திரையே வருகவே
இல்லாமையை அகற்றுவோம் வருகவே
அகதியின் சித்திரையே வருகவே
அறியாமையை அகற்றுவோம் வருகவே

மக்களின் சித்திரையே வருகவே
மாயையை அகற்றுவோம் வருகவே
பூக்களின் சித்திரையே வருகவே
போர்களை அகற்றுவோம் வருகவே

- நல்லை அமிழ்தன், யாழ்ப்பாணம்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org